Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 292 | வியாழக்கிழமை | ஆவணி 30 ஆம் நாள் 16 செப்ரெம்பர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## சாவு 132 தொற்று 2,314

கொழும்பு, செப். 16
இலங்கையில் மேலும் 132 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

15

# நாட்டைத் திறக்குமளவுக்கு டெல்டா கட்டுக்குள் இல்லை!



- திறப்பதாயின் கடும் கட்டுப்பாடுகள் வேண்டும்
- விசேட மருத்துவ நிபுணர் சந்திம ஜீவந்தர எச்சரிக்கை

கொழும்பு, செப்ரெம்பர் 16
"தற்போதைய ஆய்வுகளின்படி, டெல்டா வைரஸ் நாட்டை முழுமையாக ஆக்கிரமித்த நிலையிலேயே காணப்படுகின்றது. இவ்வாறான நிலைமையில் நாட்டை திறப்பது சாதகமான நிலைமையை ஏற்படுத்துமா? என்பது சந்தேகமே. எனவே, நாடு திறக்கப்பட்டாலும் கட்டுப்பாடுகளைக் கடுமையாக அதிகரிக்க வேண்டும்."

15

## 3 வாரங்களுக்குள் பாடசாலைகளை ஆரம்பிக்கத் திட்டம்!

மாணவர்களுக்கு 3 கட்டங்களாக தடுப்பூசி

கொழும்பு, செப். 16
200 மாணவர்களுக்கும் குறைவாக உள்ள பாடசாலைகளில் கல்வி நடவடிக்கையை, சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி ஆரம்பிப்பது தொடர்பில் கொள்கை ரீதியில்

15

## மூச்சுத் திணறலால் ஆண் குழந்தை சாவு

அதற்கும் கொரோனா

யாழ்ப்பாணம், செப். 16
இருதய நோயால் பீடிக்கப்பட்ட 4 மாதங்களேயான குழந்தை மூச்சுத் திணறல் காரணமாக உயிரிழந்தது. இளவாலை சென்.ஜேம்ஸ் பகுதியைச் சேர்ந்த ஆண் குழந்தை ஒன்றே உயிரிழந்துள்ளது. குழந்தை இருதய நோயால் பீடிக்கப்

15

## அநுராதபுரம் சிறைச்சாலையில் வீடியோக்களை அழிக்க முயற்சி

கொழும்பு, செப். 16
"அநுராதபுரம் சிறைச்சாலையில் சி.சி.ரி.வி. கமராவில் பதிவான காட்சிகளை அழிப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுவருவதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த நடவடிக்கையை அனுமதிக்க முடியாது. உரிய சட்ட நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராகவே இருக்கின்றோம்." என்று சிறைக்கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பின் உறுப்பினர் சட்டத்தரணி சேனக பெரேரா

15

## சிறைச்சாலை அமைச்சுப் பதவியிலிருந்து விலகினார் லொஹான் ரத்வத்த

மற்றைய அமைச்சிலிருந்து விலகவில்லை
ஜெனிவாவுக்குப் பூச்சுற்றினார் கோத்தா



கொழும்பு, செப். 16
அநுராதபுரம் சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் சிலருக்குத் துப்பாக்கி முனையில் கொலைமிரட்டல் விடுத்தார் எனக் கூறப்படும் சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக் கைதிகள் புனர்வாழ்வு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சர்

15

## முதற் குழந்தையைப் பிரசவித்த தாயைப் பலியெடுத்த கொரோனா

யாழ்ப்பாணம், செப். 16
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் குழந்தை ஒன்றைப் பிரசவித்த தாய் ஒருவர் கொரோனாத் தொற்றுக் காரணமாக நேற்று உயிரிழந்தார்.

15

கூட்டமைப்பும், முன்னணியும்

## தியாகதீபம் திலீபனுக்கு நேற்று நினைவேந்தல்




யாழ்ப்பாணம், செப். 16
தியாக தீபம் திலீபனின் (இராசையா பார்த்தீபன்) 34 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

14

## பட்டதாரி பயிலுநர்களுக்கு 3 மாதங்களுக்குள் நியமனம்

கொழும்பு, செப். 16
பயிலுநர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள 53 ஆயிரம் பட்டதாரிகள் எதிர்வரும் மூன்று மாதங்களில் அரச நிறுவனங்களில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் வெகுஜன ஊடக அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

15

## புரைக்கேறிய குழந்தை சாவு

அதற்குக்கூட கொரோனா

யாழ்ப்பாணம், செப். 16
பால் புரைக்கேறியது என்றுகூறி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட

15

கொரோனாவுக்கு மத்தியில்

## தலைதூக்குகிறது கறுப்பு பூஞ்சை நோய்

கொழும்பு, செப். 16
கறுப்புப் பூஞ்சைத் தொற்றுக்குள்ளான நிலையில், கொரோனா நோயாளர்கள் சிலர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

15

இலங்கைக்குக் கடத்தப்பட்ட

## 8 கோடி ரூபா 'ஐஸ்' மீட்பு நால்வருக்கும் விளக்கமறியல்

மன்னார், செப். 16
கடல் மார்க்கமாக சட்டவிரோதமாக இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட 8 கோடி ரூபா பெறுமதியான 9 கிலோ 735 கிராம் 'ஐஸ்' போதைப்

14

## 1,164 கிலோ மஞ்சள் மீட்பு

மன்னார், செப். 16
இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கடத்தப்பட்டு, வீடு ஒன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஒருதொகை உலர்ந்த மஞ்சள் கட்டி மூடைகளை அடம்பன்

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# எப்போது உயிர் மாய்ப்பதென தெரியாமல் வாழ்ந்து வருகிறோம்

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் யாழ்ப்பாண சங்கத் தலைவி கவலை

**யாழ்ப்பாணம், செப். 16**

**“காணாமலாக்கப்பட்டவர்களைத் தேடி அலைந்த பெற்றோர்கள் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துவிட்டார்கள். நாங்களும் எங்கள் உயிரை எப்போது மாய்ப்பது என தெரியாமல் வாழ்ந்து வருகின்றோம்” என்று, வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் யாழ்ப்பாண மாவட்ட இணைப்பாளர் சிவபாதம் இளங்கோதை தெரிவித்தார்.**

நல்லூரிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தமுறை நடைபெறும் ஜெனிவாக் கூட்டத்தொடரின் மூலமாக, காணாமலாக்கப்பட்டோர் விடயத்துக்குத் தீர்வு காணப்படவேண்டும். நேரடியாக ஜெனிவா சென்று சாட்சியமளிக்கா விட்டாலும்கூட இந்தக் கொரோனாக் காலத்தில் ஊடகங்கள் மூலமாக எங்களுடைய கருத்தை கொண்டுசேர்க்க விரும்புகின்றோம்.

ஆயிரத்து 500 நாள்களுக்கு மேலாக அச்சுறுத்தல்களையும் தாண்டி எமது உறவுகளைத்தேடி போராடி வருகிறோம். ஜெனிவாவுக்குச்சென்று எமது உறவுகளுக்காக நாங்கள் பலமுறை குரல் கொடுத்திருக்கிறோம் எமது கண்ணீருக்கு என்ன பதில்?

காலா அவகாசமோ கால நீடிப்போ காணாமல்போனோர் அலுவலகமோ எமக்கு வேண்டாம். ஸ்ரீலங்கா அரசு மீது எங்களுக்கு எவ்வித நம்பிக்கையும் இல்லை. இந்த நிலையிலேயே ஐக்கிய நாடுகள் சபையை நாடுகின்றோம்.

நாங்கள் 12 வருடங்களாக போராடி வருவது பணத்துக்காக அல்ல. எங்களுடைய பிள்ளைகளின் உயிர்ப்பிச்சைக்காகவே. காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் தங்களுடைய வாழ்வாதாரத்தை கொண்டுநடத்த பெரும் சிரமப்படுகின்றனர். எனவே, எங்கள் பிள்ளைகளை தயவுசெய்து மீட்டுத் தாருங்கள். என்றார். (த -20)

*ஐ.நா. சபையின்*

# இலங்கை அலுவலகம் அரசுக்கு கண்டனம்

கொழும்பு, செப். 16

“கைதிகளைத் தவறாக நடத்துவது கண்டிக்கத் தக்கது” என்று ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை அலுவலகம் தெரிவித்துள்ளது.

மண்டேலா விதிகளின் படி, கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பது அரசின் கடமை என்று இலங்கையிலுள்ள ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர்ஹம்டி ருவிற்றரில் குறிப்பிட்டுள்ளார்.

“சிறைச்சாலை சீர்திருத்தம் மற்றும் போதை மறுவாழ்வு தொடர்பான எங்கள் பணிகளில், சிறையில் உள்ள அனைவரின் உரிமைகளையும் நிலைநாட்டும் திறனை வலுப்படுத்த வேண்டும். இலங்கை அரசு, கைதிகளைத் தவறாக நடத்துவதை ஐ.நா. கண்டிக்கிறது” என்று குறிப்பிட்டுள்ளார்.

இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, தமிழ் அரசியல் கைதிகளைக் கொலை செய்வேன் என்று மிரட்டினாரென்ற குற்றச்சாட்டுத் தொடர்பாக இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். அதனால் ஏற்பட்ட பலதரப்பு அழுத்தம் காரணமாக அவர் நேற்றுப் பதவி விலகினார். (த-இ)

# கொரோனாத் தொற்றால் வவுனியாவில் 5 பேர் சாவு

வுனியா, செப். 16

வவுனியாவில் 5பேர் கொரோனாத் தொற்றால் நேற்று உயிரிழந்துள்ளனர். குறித்த நபர்களில் இருவர் திடீர் சுகவீனம் காரணமாக வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. மருத்துவமனையின் கொரோனா விடுதியில் அவர்கள் சேர்க்கப்பட்டு சிகிச்சைபெற்று வந்த நிலையில் நேற்று உயிரிழந்தனர்.

ஏனையவர்கள் சுகவீனம் காரணமாக அவரவர்களின் வீடுகளில் உயிரிழந்தனர். அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (த110)

# தமிழரின் பிரச்சினைகள் பலவற்றை ஐ.நா. ஆணையாளர் குறிப்பிடவில்லை

யாழ்ப்பாணம், செப். 16

“தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் பல விடயங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் குறிப்பிடவில்லை என்பது மனவருத்தத்தைத் தருகின்றது என்று குறிப்பிட்டுள்ளார், நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன். அவர் அனுப்பிய கேள்வி பதில் அறிக்கையில்,

எமது காணிகளை அரசு தந்திரமாகவும் பலாத்காரமாகவும் கையேற்றல் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஒருவேளை பல உண்மையான தரவுகளை விவரமாக அவர் எதிர்பார்த்திருக்கின்றாரோ நான் அறியேன். அடுத்த மார்ச் மாதக் கூட்டத்துக்கு முன்னர் இவை பற்றி முழு விவரங்களை நாம் சேகரித்து அனுப்ப வேண்டும்.

நாம் எதிர்பார்த்த பல விடயங்கள் கூறப்படாமல் விட்டாலும் தற்போதைக்கு இலங்கை அரசை சர்வதேச கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளார். அரசும் வேறு வழியின்றி அதற்கு இசைந்துள்ளது. பணம் தான் பிரச்சினை. அத்துடன் நாம் நடப்பவை பற்றிய உண்மை விவரங்களை பட்டியலிட்டு அவருக்கு அனுப்பக் கடமைப்பட்டுள்ளோம். - என்றுள்ளது. (த)

# கரவெட்டியில் நேற்றிரவு 15 பேர் கைதாகிப் பிணை

யாழ்ப்பாணம், செப். 16

கரவெட்டி இராஜகிராமம் பகுதியில் ஏற்பட்ட குழு மோதலையடுத்து, அந்தப் பகுதியைச் சேர்ந்த 15 பேரை நெல்லியடி பொலிஸார் நேற்றிரவு கைதுசெய்தனர்.

அந்தப் பகுதியில் இரு பகுதியினருக்கு இடையே ஏற்பட்ட தகராறு மோதலாக மாறியது. அதனையடுத்து பொலிஸார் அந்தப் பகுதிக்குச் சென்று நிலைமையைக் கட்டுப்படுத்தினர். 15 பேர் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். விசாரணைகளின் பின்னர் அவர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். விசாரணை தொடர்கின்றது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-26)

# பௌத்தம்பற்றி வகுப்பெடுக்கும் அரசின் வக்கிர மனசு இதுவா?

*மனோ கணேசன் ஆவேசம்*

கொழும்பு, செப். 16

அநுராதபுரம் சிறைச்சாலையில் இடம்பெற்ற சம்பவம் அரசின் வக்கிரமான மனநிலையைக் காட்டுகின்றதா? என்று கேள்வி எழுப்பியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினரான மனோ கணேசன். இது தொடர்பில் தனது சமூக வலைத்தளத்தில் மனோ கணேசன் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

ஓர் இராஜாங்க அமைச்சர் அநுராதபுர சிறைக்குச் சென்று, துப்பாக்கி முனையில், தமிழ் அரசியல் கைதிகளை முழந்தாளிட செய்து அவமானப்படுத்தி, பயமுறுத்தி உள்ளார். இதுவொரு மனித உரிமை மீறல், மனிதர்களின் ஆத்ம கௌரவத்தை அவமானப்படுத்தும் ஒரு கிரிமினல் செயல். பௌத்தம் பற்றி நாட்டுக்கு தினந்தோறும் வகுப்பெடுக்கும் இந்த அரசாங்கத்தின் மிக வக்கிரமான இனவாத மனசை இது காட்டுகிறதா? ஜனாதிபதி இதற்கு பதில் கூற வேண்டும் என்றுள்ளது. (ம)

# கொரோனாவால் தாய் சாவு யாழ்ப்பாணத்துக்கு ஓடிய மகன்

வவுனியா, செப். 16

வவுனியாவில் கொரோனாத் தொற்றுக்குள்ளான தாய் ஒருவர் உயிரிழந்தநிலையில், அவருடன் தனிமைப்படுத்தப்பட்டிருந்த அவரது மகன் தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறி வீட்டிலிருந்து வெளியேறி யாழ்ப்பாணம் சென்றுள்ளார் என்று கூறப்பட்டுள்ளது. அவருக்கு எதிராக பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

வவுனியா, கோவில்குளம், 5 ஆம் ஒழுங்கையில் வசித்துவந்த 73 வயதுடைய தாயாரே நேற்றுமுன் தினம் உயிரிழந்தார் அவருக்கு, முன்னர் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து அவருடைய வீட்டிலேயே தனிமைப் படுத்தப்பட்டிருந்தார். அவருடன் அவருடைய மகனும் அதே வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார். தாயாருக்கு நோய்த்தொற்று அதிகரித்ததால், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். இந்தநிலையில், தாயார் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

தாயார் உயிரிழந்த தகவலைத் தெரியப்படுத்தி, குடும்பத்தினரை [illegible] கிரியைக்கு அழைப்பதற்காக பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், அந்தத்தாயின் தனிமைப்படுத்தப்பட்டிருந்த வீட்டுக்குச் சென்றபோதே தொற்றுக்குள்ளான நிலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த மகன் வீட்டில் இருக்கவில்லை என்பது தெரியவந்தது. அவருடைய உறவினர்களிடம் விசாரித்தபோது அவர் யாழ்ப்பாணம் சென்றுள்ளார் என்று பதில் கிடைத்துள்ளது. அதனையடுத்து, தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிச்செயற்பட்டார் என்று அந்த இளைஞனுக்கு எதிராக பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். (த-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சப்பாத்துக்களை நாக்கினால் நக்கச் சொல்லி சித்திரவதை

**அநுராதபுரம் சிறைச்சாலை சம்பவம் தொடர்பில் திடுக்கிடும் தகவல்கள்**

கொழும்பு, செப். 16

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த சுட்டுக்கொல்ல முயன்றமை மற்றும் அவர்களை சித்திரவதை செய்தமை தொடர்பில் சுயாதீன விசாரணைக் குழு அமைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

ஜனாதிபதி இத்தகைய விசாரணைக்குழுவை நியமிக்கும்வ,ரை அனைத்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்ற அமர்வுகளை புறக்கணிக்கவேண்டுமென தமிழ் அரசியல் கைதிகளது குடும்பங்கள் அழைப்பு விடுத்துள்ளன. இது தொடர்பில் அவர்கள் ஊடக சந்திப்பில் தெரிவித்ததாவது:

வழக்கம் போல ஊடக அறிக்கைகளை விடுத்து பின்னர் ஓய்ந்து போவது எமது தலைவர்களது பண்பாடாகும். அவ்வாறில்லாமல் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். கைதிகளது நலன்களை பாதுகாக்கும் ஒரு அமைச்சராக இருந்தவாறு எமது பிள்ளைகள் மற்றும் குடும்ப அங்கத்தவர்கள் மீது தனது சகபாடிகள் சகிதம் மதுபோதையில் அதுவும் இரவு நேரத்தில் இராஜாங்க அமைச்சரால் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள் அதிர்ச்சியைத் தந்துள்ளது. அக்கும்பல் எமது பிள்ளைகளை தமது பாதணிகளை நாக்கினால் துப்புரவு செய்யச் சொல்லியிருக்கின்றனர்.

எமது உறவுகளை உயிருடன் பாதுகாக்க முதலில் அவர்களை யாழ்ப்பாணம் சிறைக்கு மாற்றவேண்டும். அதற்கு முன்னதாக அவர்கள் தொடர்பிலான வழக்குகள் உள்ள நீதிமன்றங்களில் அவர்களை முற்படுத்தி நடந்தவற்றை வெளிப்படுத்த வேண்டும். கைதிகள் நீதிமன்ற விசாரணைகளுக்காகவே சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். அவ்வகையில் அவர்களை பாதுகாக்க வேண்டியது இலங்கை நீதிமன்றங்களது கடமை.

இதேவேளை தமிழ்க் கட்சிகளது பிரதிநிதிகள் குழுவொன்று உடனடியாக அநுராதபுரம் சிறைக்கு பயணம் செய்து நேரில் தமிழ் அரசியல் கைதிகளது நலன்களை முதலில் கண்காணிக்கவேண்டும்.

ஐ.நா. வில் 16 அரசியல் கைதிகளது விடுதலை பற்றி வெளிவிவகார அமைச்சர் உரையாற்றிக் கொண்டிருக்க சிறையினுள் கைதிகளை அமைச்சரே கொல்ல முற்படுகின்ற அவலம் இங்கேயே நடந்திருக்கின்றது, என்றனர். (ஒ.இ)

# சிறைச்சாலைக்குள் அட்டகாசம் அமைச்சரைப் பதவி நீக்குங்கள்

## எதிர்க்கட்சித் தலைவர் ஜனாதிபதியிடம் வலியுறுத்து

**கொழும்பு,செப்.16**

**அநுராதபுரம் சிறைச்சாலையில் இராஜாங்க அமைச்சர் ஒருவர் மேற்கொண்ட இழிவான மற்றும் சட்டவிரோதமான நடவடிக்கையை கண்டிக்கின்றேன். இவ்வாறான செயலில் ஈடுபட்ட அந்த நபரை அமைச்சுப் பதவியிலிருந்து நீக்க வேண்டும்.**



இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பில் அவர் தனது முகநூல் பக்கத்தில் பதிவிடுகையில்,

இந்தக் கேவலமான செயல் நமது நாட்டின் அராஜக நிலைக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும். நாட்டில் வாழும் அனைத்து குடிமக்களினதும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் அரசுக்குக் கடப்பாடு உள்ளது. இந்த சட்டவிரோதமான மற்றும் கேவலமான செயல் நமது நாட்டில் மனித உரிமைகளின் நிலைமை வேகமாகக் குறைந்து வருவதற்கு மற்றொரு எடுத்துக்காட்டாகும். அந்த அமைச்சரை உடனடியாக பதவியில் இருந்து நீக்குமாறு நான் ஜனாதிபதியைக் கேட்டுக் கொள்கின்றேன்- என்றுள்ளார். (ஒ,4)

# லொஹான் விவகாரத்தின் பின்னணியை ஆராயுங்கள்

## சுரேஷ் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,செப்.16

இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தனது நண்பர்களுடன் சிறைச்சாலைக்குள் துப்பாக்கியுடன் சென்ற விவகாரத்தின் பின்னணி ஆராயப்பட வேண்டும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சர் ஒருவர் சிறைச்சாலைக்குள் துப்பாக்கியுடன் செல்வதை சிறைச்சாலை அதிகாரிகள் எவ்வாறு ஏற்றுக்கொண்டனர். அதிகாரிகளாக இருந்தாலும் சரி சிறைச்சாலைக்குள் அங்கீகாரம் அளிக்கப்பட்டோரைத் தவிர, அரசியல்வாதிகளோ எந்த ஒரு அதிகாரியோ துப்பாக்கியுடன் சிறைச்சாலைக்குள் நுழைய அனுமதித்தது மிகவும் தவறான விடயமாகும்.

சிறைச்சாலைகள் விருந்தினர் விடுதிகள் அல்ல. துப்பாக்கியுடன் சிறைச்சாலைக்குச் சென்ற அமைச்சர் தனியாகச் செல்லவில்லை. அவர் தனது நண்பர்களுடன் சென்றுள்ளார். தமிழ் அரசியல் கைதிகளை அவர்கள் மிரட்டியுள்ளனர். அவர்களை முழங்காலில் இருத்தி பயமுறுத்தியுள்ளனர். இது ஒரு மோசமான சம்பவம்.

இந்த அமைச்சரின் நடவடிக்கை தொடர்பில் சரியான விசாரணை நடத்தப்பட வேண்டும்.

அவர் அமைச்சராக இருப்பதற்கு தகுதியற்றவர். ஆகவே அவரை அமைச்சுப் பதவியிலிருந்து நீக்க வேண்டும். இந்த விடயம் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். என்றார். (4)

# சித்திரவதைகள் தொடர்ந்தால் வடக்கு, கிழக்கு கிளர்ந்தெழும்

## சட்டத்தரணி சுகாஷ் காட்டம்

வவுனியா, செப். 16

தமிழ் அரசியல்கைதிகளுக்கு எதிராகச் சித்திரவதைகள் தொடர்ந்தால் கொரோனாவைத் தாண்டியும் வடக்கும் கிழக்கும் கிளர்ந்தெழும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளரும் சட்டத்தரணியுமான கனகரட்ணம் சுகாஷ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறைச்சாலைக்குள் அடாத்தாகப் பிரவேசித்து தமிழ் அரசியல் கைதிகளை மிரட்டி, முட்டுக்காலில் நிற்க வைத்து சித்திரவதை செய்த சிங்கள இராஜாங்க அமைச்சரின் அராஜகத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம். சிங்களக் கட்சிகளுக்கு தமிழர் தாயகத்திலிருந்து வால் பிடிப்போர் இனி அம்மணமாகத் திரியுங்கள்.

தமிழ் அரசியல் கைதிகளுக்கு எதிராகச் சித்திரவதைகள் தொடர்ந்தால் கொரோனாவைத் தாண்டியும் வடக்கும் கிழக்கும் கிளர்ந்தெழும். கொரோனாக் காலத்தில் யாருக்கும் தெரியாமல் அரசியல் கைதிகளில் கைவைப்பதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது- என்றார். (ம-110)

# லொகான் ரத்வத்தவின் குற்றம் மிகவும் பாரதூரமான விடயமே

## தமிழ்த் தேசியக் கட்சி கண்டனம்

யாழ்ப்பாணம், செப். 16

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் சிலரை, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் லொகான் ரத்வத்த துப்பாக்கி முனையில் முழந்தாளிட வைத்து பயமுறுத்தியதாக தெரிவிக்கப்பட்டிருக்கும் முறையீடு மிகவும் பாரதூரமானது - என்று தமிழ்த் தேசியக் கட்சி தனது கண்டனத்தைப் பதிவுசெய்துள்ளது.

அந்தக் கட்சி அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

அநுராதபுரம் சிறைச்சாலையில் இடம்பெற்ற சம்பவத்துடன் தொடர்புடைய இராஜாங்க அமைச்சர் என்ற பதவி நிலையில் உள்ளவர். அதுவும், சிறைச்சாலைகளுடன் சம்பந்தப்பட்ட அமைச்சர். அமைச்சுப் பொறுப்பில் உள்ள ஒருவருக்கு எதிராக இத்தகைய குற்றச்சாட்டு முன் எப்பொழுதும் இந்தநாட்டில் எழுந்தது கிடையாது. சிறைச்சாலைகளில் உள்ள க்கைதிகள் நீதிமன்றக் கட்டளைகளின் பிரகாரமே அங்கு தடுத்து வைக்கப்படுகின்றார்கள். மனிதர்கள் என்ற முறையிலும், இந்த நாட்டின் குடிமக்கள் என்ற அடிப்படையிலும் அரசியல் சாசனத்தின் கீழ் அவர்களுக்குப் பல்வேறு உரிமைகள் உள்ளன.

அரசியல் அதிகாரத்தை எவரும் அவர்களுக்கு எதிராகப் பிரயோகித்து அடாவடித்தனமாக நடந்து கொள்வதற்கு சட்டத்தில் அறவே இடமில்லை. மேலும், அமைச்சர் என்ற உயர்ந்த பொறுப்பை வகிக்கும் எவரும் சட்டத்தை மதித்து நடக்க வேண்டியவர்கள்.

மிகப் பாரதூரமான முறையீடு ஒன்று, குறித்த அமைச்சருக்கு எதிராகத் தெரிவிக்கப்பட்டிருக்கும் நிலையில், அதனை உடனடியாகக் கவனத்தில் எடுத்து உரிய சட்டநடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதை ஜனாதிபதியும், பிரதமரும் உறுதிப்படுத்த வேண்டும். மனித உரிமைகளில் நம்பிக்கை கொண்டுள்ள சகல அரசியல் கட்சிகளும், சமூக அமைப்புக்களும் இந்த விவகாரத்தில் நீதி நிலைநாட்டப்படுவதை வலியுறுத்தி குரல் கொடுக்க முன்வருவார்கள் என்றும் எதிர்பார்க்கின்றோம் - என்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மத்தள விமான நிலையம் தீவிரவாதிகளின் இலக்கா?

## பொலிஸார் குவிக்கப்பட்டு உச்சக்கட்டப் பாதுகாப்பு

கொழும்பு, செப். 16

**மத்தள மஹிந்த ராஜபக்ச சர்வதேச விமான நிலையம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் நேற்று முற்பகல் பெருமளவான பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டனர். தீவிரவாதத் தாக்குதல் குறித்த பகுதியில் நடத்தப்படலாம் என்ற அச்சத்தாலேயே இவ்வாறு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது.**

தங்கல்ல பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் அணியொன்றே நேற்று குறித்த பகுதியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டது. இது தொடர்பில் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது, தீவிரவாத தாக்குதல் ஒன்று நடத்தப்படவுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. எனவே இப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் தகவல் உறுதி செய்யப்படவில்லை என்றாலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது -என்று தெரிவித்தார். (ம)



வட்டுக்கோட்டையில் சுற்றிவளைப்பு

## பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய நால்வர் கைது!

யாழ்ப்பாணம், செப். 16

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் பொலிஸார் மேற்கொண்ட அதிரடி சுற்றிவளைப்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்காக நால்வர் கைது செய்யப்பட்டனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையப் பிரிவுகளிலும் சிறப்புச் சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் வட்டுக்கோட்டை பொலிஸார் நேற்றையதினம் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் முகக்கவசம் அணியாத ஒருவரையும், பயணத் தடையை மீறிய ஒருவரையும், போக்குவரத்து விதிமுறைகளை மீறிய இருவரையும் கைது செய்தனர். அவர்கள் நால்வரையும் நாளையதினம் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (ம-125)

## காக்கைதீவு கடற்கரையில் கரையொதுங்கிய சடலம்

### இதுவரை எழுவர் கைது

கொழும்பு, செப்.16

மட்டக்குளி காக்கைதீவுக் கடற்கரையில் கரையொதுங்கிய ஆணொருவரின் சடலம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அவரது மனைவி உள்ளிட்ட எழுவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முகம் துணியால் சுற்றப்பட்டு, கை, கால்கள் கயிற்றால் கட்டப்பட்டிருந்த நிலையில் சடலம் கரையொதுங்கியிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசேட விசாரணைகளில், இராணுவப்புலனாய்வுப் பிரிவின் கோப்ரல் உள்ளிட்ட 6 இராணுவத்தினரும், மட்டக்குளிப் பிரதேசத்தின் கிராம அலுவலரான பெண்ணொருவரும் கைது செய்யப்பட்டனர்.

சடலமாக மீட்கப்பட்ட நபர், தற்போது கைது செய்யப்பட்டுள்ள கிராம அலுவலரின் கணவர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மட்டக்குளி இராணுவ முகாமில் கடமையாற்றிய, புலனாய்வுப் பிரிவின் கோப்ரல் உள்ளிட்ட 6 பேரை இராணுவப் பொலிஸ் பிரிவு கைது செய்தது. சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

பொலிஸார் பெண் கிராம அலுவலரைக் கைது செய்திருந்தனர்.


சந்தேகநபர்களை தற்போது தடுப்புக் காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ள நீதிமன்று அனுமதி வழங்கியுள்ளது. (ஒ-4)

## சிறப்புத் தேவையுடையோருக்கு செயற்கையான அவயவங்கள்

கிளிநொச்சி, செப். 16

சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் 15ஆம் ஆண்டு நிறைவு நாளை முன்னிட்டு சிவில் பாதுகாப்பு திணைக்களத்தில் இருந்து சிறப்புத் தேவையுடைய நிலைக்குத் தள்ளப்பட்டவர்களுக்கு செயற்கை உடல் அவயவங்கள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் கட்டளை அதிகாரி லெப்டினன்ட் கேணல் பிரதீப் லியனகே தலைமையில் கிளிநொச்சி நெலும் பியச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் ரஞ்சன் லமகேவகே, முல்லைத்தீவு மாவட்ட இராணுவக் கட்டளை அதிகாரி, கிளிநொச்சி 57ஆவது படைபிரிவின் கட்டளை அதிகாரி மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் ஏனைய பிரிவுகளின் கட்டளை அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர். (ம-6)



## மரக்கறி வியாபாரிகளை அப்புறப்படுத்தியது நகரசபை

வவுனியா, செப். 16


ஊரடங்கு காலப்பகுதியில் வவுனியா நகர்ப்பகுதியில் செயற்பட்டுவந்த நடைபாதைக் கடைகள் வவுனியா நகரசபையால் நேற்று அகற்றப்பட்டன.

குறிப்பாக சந்தை சுற்றுவட்டவீதி, இலுப்பையடி, குருமன்காடு ஆகிய பகுதிகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மரக்கறிகள், பழங்கள் மற்றும் உணவுப் பொருள்களை வைத்து விற்பனை செய்த வியாபாரிகளின் கடைகள் நேற்று அகற்றப்பட்டன.

இதுதொடர்பாக கருத்துத் தெரிவித்த நகரசபை தலைவர் இ.கௌதமன், குறித்த விற்பனை நிலையங்கள் கொரோனாத் தொற்றைக் கருத்தில்கொண்டு அகற்றப்பட்டுள்ளன.

எனினும், வியாபாரிகள் இத்தகைய நடவடிக்கையில் தொடர்ந்து ஈடுபட முனைப்புக் காட்டுகின்றனர். எனவே இவ்வாறான கண்காணிப்புக்கள் இனி தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் -என்றார். (ம-110)

## இலங்கை மத்திய வங்கி ஆளுநராக கடமையைப் பொறுப்பேற்ற கப்ரால்



கொழும்பு, செப். 16

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள கப்ரால், ஜனாதிபதியிடம் இருந்து நேற்று நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டார்.

இது தொடர்பில் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு அனுப்பிவைத்துள்ள அறிக்கையில், இலங்கை மத்திய வங்கியின் 16 ஆவது ஆளுநராக அஜித் நிவாட் கப்ரால் நியமிக்கப்பட்டுள்ளார். பிரசித்திபெற்ற பட்டயக் கணக்காளரான அஜித் நிவாட் கப்ரால், இதற்கு முன்னர் அமைச்சின் செயலாளராகவும் சுமார் 9 மாதக் காலப்பகுதி வரையில், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராகவும் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது -என்றுள்ளது. (ம)

## கசிப்பு விற்பனையில் ஈடுபட்டவர் கைதானார்

யாழ்ப்பாணம், செப். 16

ஆவரங்கால் மேற்கு வன்னியசிங்கம் வீதியில் உள்ள வீடு ஒன்றில் வைத்து கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட நபர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார் என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.

காங்கேசன்துறை சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் சிறப்புப் புலனாய்வுப் பொலிஸார் இந்தக் கசிப்பு விற்பனை இடத்தை முற்றுகையிட்டனர்.

இதன்போது 30 வயதுடைய சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் இருந்து 5 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டது. (ம-25)

## கோரவிபத்தில் இளைஞன் பலி



யாழ்ப்பாணம், செப். 16

அதிவேகமாகச் சென்ற மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்துடன் மோதியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த சம்பவம் கொடிகாமம் காரைக்காட்டுப் பகுதியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 9.30 மணிக்கு இடம்பெற்றது.

சம்பவத்தில் கொடிகாமம், கோயிலாமனைப் பகுதியைச் சேர்ந்த இராஜேஸ்வரன் நவர்ணன் (வயது 24) என்பவரே உயிரிழந்தவராவார்.

விபத்து தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சுற்றுலாப்பயணிகளுக்காக விசேட பி.சி.ஆர். மையம்

கொழும்பு, செப்.16

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்காக கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பி.சி.ஆர் பரிசோதனை மையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மையத்தை சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆய்வு செய்தார்.

இந்த மையத்தின் மூலம், கட்டுநாயக்க விமான நிலையம் வழியாக இலங்கைக்கு வரும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தமது பரிசோதனை முடிவுகளை மூன்று மணித்தியாலத்துக்குள் பெற்றுக்கொள்ளமுடியும்.

இந்த மையத்தில் ஒரு மணித்தியாலத்தில் 500 சோதனைகள் முன்னெடுக்கப்படும். அத்துடன் ஒரு நாளைக்கு 7 ஆயிரம் சோதனைகளைச் செய்யும் வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஒ-4)

# தடுப்பூசி ஏற்றியோர்தான் வீதிகளில் நடமாடமுடியும்

## முல்லைத்தீவில் இறுக்கமாகிறது சட்டம் பரிசோதனை செய்யவும் நடவடிக்கைகள்



**முல்லைத்தீவு, செப். 16**

**முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டவர்களே சுகாதார விதிமுறைக்கு அமைவாக வீதிகளில் நடமாட முடியும் என முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிமனையின் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

இரண்டு தடுப்பூசிகளையும் ஏற்றியவர்கள் கட்டாயம் தடுப்பூசி செலுத்திய அட்டையைக் கைவசம் வைத்திருக்க வேண்டும். அவற்றைப் பரிசோதனை செய்வதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாவட்டத்தில் முதற்கட்ட தடுப்பூசி பெறாதவர்களுக்கான தடுப்பூசிகள், முல்லைத்தீவு உண்ணாப்பிலவு மருத்துவமனையிலும், அளம்பில் ஆதார மருத்துவமனையிலும், புதுக்குடியிருப்பு பிராந்திய சுகாதார பணிமனை, மூங்கிலாறு ஆதார மருத்துவமனை, ஒட்டுசுட்டான் பிராந்திய சுகாதாரப் பணிமனை, மல்லாவி பிராந்திய சுகாதாரப் பணிமனை ஆகிய இடங்களிலும் ஏற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இரண்டாம் கட்ட தடுப்பூசிகளையும் இந்த இடங்களில் பெற்றுக்கொள்ளலாம். 30 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் பிராந்திய சுகாதார பணிமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-19)

## கொழும்பு மாநகரில் இலவச அன்டிஜென்


கொழும்பு, செப்.16

கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் நிரந்தர மற்றும் தற்காலிகமாக வசிப்பவர்களுக்கு நேற்று முதல் இலவச அன்டிஜென் பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக, கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் வசிப்பவர்கள் துரித அன்டிஜென் பரிசோதனையை செய்து கொள்ள முடியும் என்று கொழும்பு மாநகர சபையின் தலைமை மருத்துவ அதிகாரி ருவன் விஜயமுனி தெரிவித்துள்ளார்.

வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை தவிர ஏனைய நாள்களில் காலை 9 மணி முதல் மதியம் 12 மணி வரை பொரளை கெம்பல் மைதானத்தில் பரிசோதனை இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ரி-2)

## சதொச ஊடாக 5 கிலோ சீனி



கொழும்பு, செப்.16

சதொச ஊடாக தற்போது 5 கிலோ கிராம் சீனியைக் கொள்வனவு செய்ய முடியும் என்று சதொசவின் தலைவரான ஆனந்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மூன்று கிலோ கிராம் சீனியை மாத்திரமே வாடிக்கையாளர்கள் சதொச ஊடாக கொள்வனவு செய்ய முடியும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டு இருந்த நிலையில், தற்போது அது 5 கிலோ கிராமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஒரே நேரத்தில் 5 பேர் மாத்திரமே சதொச விற்பனை நிலையங்களுக்குள் அனுமதிக்கப்படுவர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை நாடு முழுவதும் போதுமான அளவு சீனி விநியோகிக்கப்பட்டுள்ளது.

போதுமான அளவு சீனி இருப்பிலும் உள்ளது. ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளதால் தொலைதூரப் பகுதிகளிலுள்ள சில கடைகளுக்கு சீனியை விநியோகிப்பதில் தாமதம் ஏற்படலாம் என்று அத்தியாவசிய சேவைகளின் ஆணையாளரான செனரத் நிவுன் ஹெல்ல தெரிவித்துள்ளார். (ரி-2)

## நித்திரைக்குச் சென்றவர் அதிகாலை சடலமாக மீட்பு

கிளிநொச்சி, செப். 16

சுண்டிக்குளம் கடற்பகுதியில் நேற்றுமுன்தினம் மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நபர், வேலைகளை முடித்துவிட்டுப் படுக்கைக்குச் சென்ற நிலையில், நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டார்.

தருமபுரம் மருத்துவமனைக்கு நேற்றுக்காலை அவரின் சடலம் கொண்டுசெல்லப்பட்டு பின்னர் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டது. முத்துச்சாமி யோகராசா (வயது 55) என்பவரே உயிரிழந்தவர். அவர் சிலாபம் பகுதியைச் சேர்ந்தவர். (ம-113)

## கொரோனாவை எதிர்கொள்ள சரியான திட்டமிடல் அவசியம்

### அரசுக்கு எதிர்க்கட்சி ஆலோசனை

கொழும்பு, செப்.16

அரசாங்கம் சரியான திட்டமிடலுடன் கொரோனா பரவல் நிலைமையை எதிர்கொள்ள வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது தரவுகளை அழிப்பதன் பின்னணியில் குழுவொன்று உள்ளது. தரவுகளை அழிப்பதன் இலாபத்தை அரசுடன் வியாபார நடவடிக்கையில் ஈடுபடுகின்ற ஒரு குழுவினர் மட்டுமே பெற்றுக்கொள்கின்றனர். இது தொடர்பில் அரசு தேடிப்பார்க்க வேண்டும்.

அரசு அவ்வாறு ஒன்றும் இல்லை; எம்முடன் ஒப்பந்தம் செய்துகொண்ட குழுவினர் இல்லை என்று கூறினால், எம்பிடம் அன்டிஜென், பி.சி.ஆர். முதலாளிகள் இல்லை என்று கூறினால், அரிசி விற்பனை மாஃபியாக்கள் இல்லை என்று கூறினால், குழுவொன்றை நியமித்து இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். இல்லையெனில் வழமைபோன்று காலத்துடன் இந்த விடயத்தை மக்கள் மறந்துவிடுவார்கள். அந்தக் குழுவினர் வழமைபோன்று ஒப்பந்த வியாபாரத்தை முன்னெடுத்துச் செல்வார்கள்.

நாடு உண்மையில் வங்குரோத்து நிலைமையை அடைந்திருந்தால் அரசு திறபோதைய நிலையிலாவது வெளிப்படைத் தன்மையுடன் விசாரணைகளை ஆரம்பிக்கவேண்டும். பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் இன்னும் தாமத நிலை ஏற்படவில்லை. கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைச் சரியாக முகங்கொடுப்பதற்கு இன்னும் காலதாமதம் ஏற்படவில்லை.

அரசு சரியான திட்டமிடலுடன் இந்தக் கொரோனா வைரஸ் பரவலை எதிர்கொள்ள வேண்டும் என்பதுடன் மக்களின் நிலைமை தொடர்பில் கருத்தில்கொண்டு செயற்படவும் வேண்டும். மக்களின் நிலைமை குறித்து அரசு சிந்திக்க வேண்டும். அத்துடன் மக்கள் சந்தோசத்துடன் வாழ்வதற்கான சூழலை நாட்டு மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்-என்றார். (எ-22)

சுதுமலையில்

## கசிப்பு காய்ச்சியவருக்கு ரூபா 40ஆயிரம் தண்டம்

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுதுமலைப்பகுதியில் கசிப்புக் காய்ச்சிய நபருக்கு 40 ஆயிரம் ரூபா தண்டமாக விதித்தது நீதிமன்றம்.

யாழ்ப்பாணம் மானிப்பாய் சுதுமலை பகுதியில் கசிப்புக் காய்ச்சப்படுகின்றது என்று மானிப்பாய் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜயந்த குணதிலகவின் தலைமையின் கீழ் குறித்த இடத்துக்கு விரைந்த பொலிஸார் மேற்படி சந்தேக நபரைக் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவரிடமிருந்து 140 லீற்றர் கோடாவும், 7 லீற்றர் கசிப்பும் உற்பத்திக்கு பயன்படுத்திய உபகரணங்களும் மீட்கப்பட்டன. அவர் நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். அவருக்கு 40 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகளுக்கு நீட்டிய துப்பாக்கி ஐ.நா. பேரவைக்கும் நீட்டிய துப்பாக்கியே!

*அருட்தந்தை சக்திவேல் கண்டனம்*

வவுனியா, செப். 16

அரசியல் கைதிகளை மண்டியிடச் செய்து தலையில் துப்பாக்கியை வைத்து கொலை அச்சுறுத்தல் விடுத்திருக்கும் செயலானது தமிழ் மக்களின் அரசியலுக்கு நேராக நீட்டப்பட்ட துப்பாக்கியாகவும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு நேராக நீட்டிய துப்பாக்கியாகவும் கருதப்பட வேண்டிய விடயம் என்று அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்தார்.

அநுராதபுரம் சிறைச்சாலைக்குள் அத்துமீறி நுழைந்த சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் லொகான் ரத்வத்த, அங்கு தமிழ் அரசியல் கைதிகளை துப்பாக்கி முனையில் அச்சுறுத்தி முழந்தாழிட வைத்தமை தொடர்பில் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே அருட்தந்தை இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தில் சிறைச்சாலைகளின் இராஜாங்க அமைச்சர் கடந்த 12ஆம் திகதி அநுராதபுரம் சிறைச்சாலைக்கு சென்று அரசியல் கைதிகளை மண்டியிடச் செய்து தலையில் துப்பாக்கியை வைத்து கொலை அச்சுறுத்தல் விடுத்திருக்கும் செயலானது தமிழ் மக்களின் அரசியலுக்கு நேராக நீட்டப்பட்ட துப்பாக்கியாகவும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு நேராக நீட்டிய துப்பாக்கியாகவும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு கருதுவதோடு இத்தகைய அநாகரிகமான செயலை மிகவும் வன்மையாகவும் கண்டிக்கின்றது.

இலங்கை மனித உரிமைக்கு மதிப்பு அளிக்கின்ற நாடு எனில் குறிப்பிட்ட அமைச்சரை அமைச்சுப் பதவியிலிருந்து உடனடியாக நீக்கி துரித விசாரணைக்கு உட்படுத்தி உரிய தண்டனை வழங்குவதோடு மனநல சிகிச்சையும் அளித்தல் வேண்டும். அதுவே இலங்கை அரசு ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு காட்டுகின்ற நல்லெண்ண சமிக்ஞையாக அமையும். இல்லையெனில் இது இலங்கை அரசும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கெதிராக செயற்படுகின்றது என்பதை சுட்டி நிற்கும்.

மேலும் பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பாகவும், இந்தச் சட்டத்தால் நீண்டகாலம் சிறையில் வாடுவோரின் மனித உரிமை விடயமாகவும் ஆராய ஆட்சியாளர் குழு நியமித்து இருப்பதாக கூறுவது கேலிக்கூத்தாக அமையும். அது மட்டுமல்ல அரசின் பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பான செயற்பாடு ஐ.நா மனித உரிமை பேரவையையும் சர்வதேசத்தையும் ஏமாற்றும் ஒரு செயலாகவே அமையும். குறிப்பிட்ட அமைச்சரின் செயல்பாடு நீண்டகாலமாக சிறையில் வாடும் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக நம்பிக்கையற்ற நிலைக்கு தள்ளப்படுவதோடு வாழ்க்கையில் விரக்தி நிலையும் ஏற்பட்டு அத்தோடு உளவியல் ரீதியில் பாதிப்பையும் ஏற்படுத்தும் என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

சிறைச்சாலைக் கைதிகளை பாதுகாக்க வேண்டிய அமைச்சரே இவ்வாறான ஒரு செயலில் ஈடுபட்டுள்ளதன் மூலம் தமிழ் அரசியல் கைதிகளுக்கு பாதுகாப்பு இல்லை என்பது வெளிப்படுவதோடு அனைத்து அரசியல் கைதிகளையும் பாதுகாப்பு மிகுந்த தமிழர் பிரதேச சிறைச்சாலைக்கு மாற்றி அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பைக் கொடுக்க வேண்டும் என்றும் அநுராதபுரம் சிறைச்சாலை யில் உள்ள அரசியல் கைதிகளை உடனடியாக தமிழர் பகுதிகளில் உள்ள சிறைச்சாலைக்கு மாற்றி பாதுகாப்பை உறுதி செய்தல் வேண்டும்.

இனவாத ஆட்சியாளர்களால் ஆசியாவின் அறிவாலயம் எரித்து சாம்பலாக்கப்பட்ட இனப்படுகொலையுடனான இன அழிப்போடு நின்றுவிடாது இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இதற்கெல்லாம் நீதி கேட்டுக் கொண்டிருந்த நிலையில் அரசியல் கைதிகளின் தலையில் துப்பாக்கி வைக்கப்பட்டிருக்கின்றது. இந்த நாட்டின் இனவாத அரசியல் தமிழ் மக்களை இனிவரும் காலங்களிலும் அடக்கி ஒடுக்கும் என்பதற்கு இன்னுமொரு சாட்சி அரங்கேற்றப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் ஒரே சக்தியாக நின்றால் மட்டுமே எமது எதிர்காலம் காக்கப்படும்.

இச் சம்பவத்தை கருத்திற்கொண்டு இலங்கையில் நடந்த இனப்படுகொலையுடனான இன அழிப்புக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நீதி கிடைக்க வழியேற்படுத்துமாறும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்குக் கொண்டு செல்லுமாறும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு வேண்டுகோள் விடுக்கின்றது - என்றுள்ளது. (ம-110)

## மன்னாரில் நேற்றுமுதல்

# தடுப்பூசி அட்டைகள் சோதனை ஆரம்பம்!



**மன்னார், செப். 16**

**மன்னார் மாவட்டத்தில் நேற்று முதல் சோதனைச் சாவடிகளில் கொரோனாத் தடுப்பூசி அட்டைகளைச் சோதனையிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.**

மன்னார் மாவட்டத்தில் உள்ள சோதனைச் சாவடிகளில் நேற்றுப் புதன்கிழமை முதல் கொரோனா தடுப்பூசியை பெற்றுக்கொண்ட அனைவரதும் அட்டைகளைச் சோதிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மாவட்டத்தில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசிகள் அண்மைக்காலமாக தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வந்தது. இந்த நிலையிலேயே கொரோனாத் தடுப்பூசி அட்டைகளைச் சோதிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 30, வயதிற்கு மேற்பட்ட தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாதவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவர்களின் முழுமையான விவரங்களை பொதுச்சுகாதார பரிசோதகர்கள் பதிவு செய்துள்ளனர். தடுப்பூசியை பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு தடுப்பூசியை செலுத்தவும், அல்லது அன்டிஜென் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ளவும் சுகாதாரத் துறையினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-56)

# நல்லிணக்கத்தை ஆட்டம் காணவைக்கும் செயற்பாடு

*சிறைச்சாலைச் சம்பவம் தொடர்பில் சிறீதரன் எம்.பி. கண்டனம்*

கொழும்பு, செப். 16

சிங்களவர்களுடன் நல்லிணக்கத்தை வளர்க்கும் செயற்பாடுகளில் தமிழர் தரப்பு இதய சுத்தியோடு ஈடுபட வேண்டுமென வலியுறுத்தி வரும் சர்வதேசம், நல்லிணக்கத்தை அடியோடு ஆட்டம் காணவைக்கும் இத்தகைய இனவன்முறைகள் குறித்தும் தனது கவனத்தைத் திருப்ப வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அநுராதபுரம் சிறைச்சாலைக்குள் கடந்த 12ஆம் திகதி தனது நண்பர்களுடன் மதுபோதையில் நுழைந்த, சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை முழந்தாளிட்டு அமரச் செய்ததோடு, சுட்டுக்கொல்வேன் என்று கைத்துப்பாக்கியை வைத்து மிரட்டிய செயற்பாடு, இந்த அரசின் எதேச்சதிகாரத்தனத்தை வெளிச்சம்போட்டுக் காட்டும் செயலாகவே அமைந்துள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளை மிலேச்சத்தனமாக, மனிதாபிமானமற்ற முறையில் நடத்தியுள்ளமை கடும் கண்டனத்திற்குரிய செயலாகும்.

இச் செயற்பாடானது, இந்த நாட்டின் சட்டம், நீதி, இனநல்லிணக்கம் என்பவற்றை கேள்விக்குட்படுத்துவதோடு, கடந்த காலங்களில் சிங்கள பௌத்த பேரினவாதிகளால் அப்பாவித் தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட இன அழிப்புச் சம்பவங்களை மீள நினைவுபடுத்துவதாகவும் அமைந்துள்ளது. 1983 ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் வைத்து 53 தமிழ் அரசியல் கைதிகள், சக சிங்களக் கைதிகளால் குத்தியும், வெட்டியும் கோரமாகப் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். 2012 ஆம் ஆண்டு வவுனியா சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் போராளிகளான நிமலரூபன், டில்றுக்சன் ஆகிய இரு தமிழ் அரசியல் கைதிகள் சிறைச்சாலைப் பொலிஸாராலும், இராணுவத்தினராலும் அடித்துப் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறான சிறைச்சாலைப் படுகொலைகள் அனைத்தும் தமிழ் அரசியல் கைதிகளை இலக்குவைத்து தொடர்ச்சியாகத் திட்டமிட்டு நடத்தப்பட்டு வந்த நிலையில், சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக் கைதிகள் புனர்வாழ்வளிப்பு அலுவல்கள் இராஜாங்க அமைச்சரான லொஹான் ரத்வத்த, தமிழ் அரசியல் கைதிகளிடம் மிக மோசமான அதிகாரத் தொனியோடு, இனவாதத்தைக் கக்கும் வகையில் நடந்து கொண்டுள்ளமை, தமிழ் அரசியற் கைதிகளின் பாதுகாப்புக் குறித்த அச்சத்தை அவர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் ஏற்படுத்தியுள்ளது.

இந்த நாட்டின் ஜனாதிபதி நீதித் துறையின் சுயாதீனத்தைப் பேண வேண்டுமென்ற எண்ணத்தைக் கொண்டிருந்தால் இச்சம்பவம் தொடர்பில் உடனடி விசாரணைகளை மேற்கொண்டு, சம்பந்தப்பட்ட அமைச்சரை பதவியிலிருந்து நீக்கி, நீதியை நிலைநாட்ட வேண்டுமென வலியுறுத்துகிறேன்- என்றுள்ளது. (ஒ,6)

# லொஹானின் செயற்பாட்டால் சிறைக்கைதிகளுக்கு ஆபத்து

பதவி விலக்குமாறு வலியுறுத்து

மன்னார்,செப்.16

இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, சிறைச்சாலையில் மேற்கொண்ட இழிவான செயல், சிறைக்கைதிகளிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே அவரை உடனடியாக பதவி நீக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அநுராதபுரம் சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் இருவரை முழந்தாளிட்டு இருக்கச் செய்து, கைத்துப்பாக்கியைக் காட்டி கொலைசெய்துவிடுவேன் என்று இராஜாங்க அமைச்சர் மிரட்டி யுள்ளார். இவ்வாறு கொலை செய்யும் நோக்கத்துடனும், இனவாத சிந்தனையுடனும் செயற்படும் லொஹான் ரத்வத்த போன்றவர்கள் அரசியல் தலைமைத்துவத்துக்குப் பொருத்தம் இல்லாதவர்கள். அதுவும் தமது வாழ்வைத் தொலைத்து அப்பாவிகளாக நீண்ட வருடங்களாக சிறையில் வாடிக்கொண்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளிடம், பொறுப்புவாய்ந்த இராஜாங்க அமைச்சர் இவ்வாறு நடந்துகொண்டமை எமக்குச் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

இந்தச் செயற்பாடு தமிழ் அரசியல் கைதிகளுக்கு சிறையில் எதுவித பாதுகாப்பும் இல்லை என்பதை உணர்த்துகின்றது. எனவே அவரை உடனடியாகக் கைது செய்ய வேண்டும்- என்றார். (4,213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## சிறைக்கூட்டில் உயிர்க்கூடுகள்!

தமிழர் தாயகத்தில் உள்ள அத்தனை உயிர்க்கூடுகளும் இன்று கொதித்துக் கொண்டிருக்கின்றன. அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளை துப்பாக்கி முனையில் அச்சுறுத்திய சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் லொகான் ரத்வத்த, அவர்களை முழந்தாளில் இருத்தியும், சப்பாத்துக்களை நாவால் நக்கவைத்தும் துன்புறுத்தியுள்ளார். இதையடுத்து ஒருவிதப் பதற்றத்துக்குள்ளும், அச்சத்துக்குள்ளும் தமிழர் தாயகம் தள்ளப்பட்டிருப்பதை உணர்வுபூர்வமாக அவதானிக்க முடிகின்றது.

லொகான் ரத்வத்தவின் இந்தக் கொடூரமான செயலுக்கு எதிராக எந்தப் பாகுபாடும் இல்லாமல் ஒரே அணியில் ஒன்றுதிரண்டு தமது வலுவான எதிர்ப்பையும், கண்டனத்தையும், அதிருப்தியையும், ஆதங்கத்தையும் தமிழ்த் தேசியக் கட்சிகளும், சமூக அமைப்புக்களும், தன்னார்வலர்களும் பதிவுசெய்து வருகின்றமையும் தமிழர் தாயகத்தின் தற்போதைய மனோநிலையை கறையற்ற கண்ணாடி போன்று வலுவாகவே கட்டியம் செய்கின்றது.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் என்ற வகையில், லொகான் ரத்வத்தெக்கு உள்ள மிகப்பெரும் கடமை சிறைக்கைதிகளை கண்ணியமாக நடத்துவதை உறுதிப்படுத்துவதாகும். சிறைச்சாலைக் கைதிகளை கண்ணியமாக நடத்தி, அவர்களுக்கும் மரியாதையான ஒரு வாழ்வை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டிய இராஜாங்க அமைச்சரே வேலியே பயிரை மேய்வதைப்போன்று துப்பாக்கி முனையில் தமிழ் அரசியல் கைதிகளை முழந்தாளில் இருத்தித் துன்புறுத்துவதென்பது பாரதூரமும், அபத்தமும் மிக்கதான செயலே அன்றி வேறில்லை.

லொகான் ரத்வத்தவின் இந்தச் செயலை அவருடைய தனிப்பட்ட செயலாக கருதி விட முடியாது. அவர் ஓர் இராஜாங்க அமைச்சர். அரசின் பிரதிநிதி. எனவே அரசின் எண்ணவோட்டம், தமிழ் அரசியல் கைதிகளை இந்த அரசு எத்தகைய கண்ணோட்டத்தில் பார்க்கின்றது என்பதையும் ரத்வத்தவின் செயலின் வெளிப்பாடாக எடுத்துக்கொள்வதில் தவறில்லை. தவறுக்குப் பொறுப்பேற்று அவர் பதவி விலகிய போதிலும், நடைபெற்றுவரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் அமர்வு, சஜித் பிரேமதாஸ போன்ற பெரும் தலைகளின் எதிர்ப்பு என்பனதான் அவருடைய பதவி விலகலுக்கான முதுகெலும்புக் காரணமே தவிர, குற்றத்துக்கு பாத்திரமேற்று அவர் பதவி விலகினார் என்று கொள்ள முடியாது.

எல்லாவற்றையும் விட, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் பதவியைத்தான் அவர் துறந்திருக்கின்றாரே தவிர அவரிடம் ஏற்கனவே இருந்த ஏனைய அமைச்சுப் பொறுப்புக்கள் அப்படியேதான் இருக்கின்றன. ஆக, அவருடைய அரசியல் வாழ்விலும் தனிப்பட்ட வாழ்விலும் இந்த பதவி விலகல் என்பது ஒரு பொருட்டாகவே இருக்கப்போவதில்லை. அத்துடன், பதவி விலகியதால் விடயத்தை இழுத்துமூடி விடுவதற்கு இதுவொன்றும் மேற்கத்திய நாடுகளில் இடம்பெறும் துறைசார் தவறும் அல்ல, பதவி விலகலுடன் முற்றுப்புள்ளி வைக்கும் விடயமும் அல்ல.

ஒருவரை நோக்கி துப்பாக்கியை நீட்டி அச்சுறுத்துவதென்பது பாரதூரமான குற்றம். அந்தப் பாரதூரமான குற்றத்துக்கான தண்டனையை லொகான் ரத்வத்த அனுபவிக்கவேண்டும். இந்த அரசு இதய சுத்தியுடன் இந்த விடயத்தை அணுகுகின்றது என்றால் பதவி விலகலுக்கும் அப்பால் சென்று இந்த விவகாரத்தைக் கையாளவேண்டும்.

தமிழ் அரசியல் கைதிகள் சிறைச்சாலைகளில் படுகொலை செய்யப்படுவதோ அச்சுறுத்தப்படுவதோ இலங்கையில் புதிதல்ல. 1983, 2000, 2012ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற பல கசப்பான சம்பவங்கள் இலங்கைச் சிறைச்சாலைகளில் உள்ள பாதுகாப்பை வரலாற்று ரீதியாகக் கேள்விக்கு உட்படுத்திக் கொண்டிருக்கையில், தற்போது ரத்வத்தவின் துர்நடத்தை அதற்கு மற்றுமொரு பிந்தியதும் பெரியதுமான எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. தமிழ் அரசியல் கைதிகளை அவர்களின் சொந்த மாவட்டங்களில் உள்ள சிறைச்சாலைகளுக்கு இடமாற்ற வேண்டும் என்று அரசியல் கைதிகளின் உரிமைகளை வலியுறுத்தும் பல அமைப்புக்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வரும் கோரிக்கை, எந்த அளவுக்கு நியாயமானது, யதார்த்தமானது என்பதும் தற்போது மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.




# அலாவுதீனின் அற்புதவிளக்கே அமைச்சர் பஸிலின் 'பட்ஜெட்'!

### நவம்பரில் தெரியவருமென மொட்டுக் கட்சி மார்தட்டல்

**கொழும்பு, செப். 16**

**அலாவுதீனின் அற்புத விளக்குப்போன்று எவரும் எதிர்ப்பாராத விதமாக புரட்சிகரமானதொரு வரவு செலவுத் திட்டத்தை எதிர்வரும் நவம்பர் மாதம் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச நாடாளுமன்றத்தில் முன்வைப்பார் என அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.**



பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. பட்ஜெட்டை தயாரிப்பது தொடர்பில் அமைச்சர்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் சுயாதீன அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார்.

எனவே, இந்நாட்டில் உணவு உள்ளிட்ட தேசிய உற்பத்தியை அதிகரித்தல், மிகப் பெரிய தொழில் துறைகளை மேம்படுத்தல் உட்பட அனைத்து துறைகளிலும் அபிவிருத்தியை ஏற்படுத்தக்கூடிய வகையிலான முன்மொழிவுகள் வரவு செலவுத் திட்டத்தில் இடம்பெறும்.

அட, இப்படி ஒரு ப.ஜெட்டை முன்வைக்க முடியுமா என பலரும் ஏங்கும் விதத்திலும், எதிர்பாராவகையிலும் கீழ்மட்டம் முதல் அனைவராலும்ஏற்றுக்கொள்ளக்கூடிய பாதீடே இம்முறை முன்வைக்கப்படும். பல புரட்சிகரமான மாற்றங்கள் நடக்கும். அலாவுதீனின் அற்புத விளக்காக அது அமையும், என்றார்.

(ஓ-44)

# இலங்கை விவகாரத்தில் ஐ.நா. நடுநிலையில்லை

### அமைச்சர் வாசுதேவ ஆதங்கம்

கொழும்பு,செப்.16

இலங்கை விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை ஒரு தலைப்பட்சமாகச் செயற்படுகின்றமை பல விடயங்கள் ஊடாக வெளிப்பட்டுள்ளது. எனினும் பேரவையின் தீர்மானங்கள் நடுநிலையானதாக அறிவிக்கப்படவேண்டும் என்று நீர்வழங்கல் துறை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்:

இராணுவத்தினர் தொடர்பில் அதிக கவனம் செலுத்தும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர், இலங்கையில் விடுதலைப்புலிகள் அமைப்பினரால் முன்னெடுக்கப்பட்ட மனித உரிமை மீறல் குற்றங்கள் [illegible] கவனம் செலுத்தவில்லை. ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை அடிப்படையாகக்கொண்டு இலங்கை தொடர்பில் விவாதம் ஒவ்வொரு முறையும் இடம்பெறுகின்றது.

ஆனால் தற்போது மனித உரிமைப் பேரவை தனது பொதுக் கொள்கைக்கு அப்பாற்பட்டுச் செயற்படுகின்றது. இலங்கையில் 30 வருடங்கள் நிகழ்த்த போர் ஓர் இனத்துக்கு மாத்திரம் பாதிப்பை ஏற்படுத்தவில்லை - என்றார்.

(ஓ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. ஆணையாளரின் அறிக்கை மனச்சஞ்சலத்தை ஏற்படுத்தியுள்ளது

## அரசை நம்பும் அவரது அறிக்கையை விமர்சிக்கிறது ஈ.பி.ஆர்.எல்.எவ்.

**யாழ்ப்பாணம், செப். 16**

**நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் கடந்த எட்டு ஆண்டுகளுக்கு மேலாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையை மட்டுமே நம்பிக் காத்திருக்கும் மக்களுக்கு மனித உரிமைகள் ஆணையகத்தின் அறிக்கை என்பது, மனச்சஞ்சலத்தையும் அமைதியின்மையையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது - இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**



ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 48ஆவது கூட்டத் தொடரின் ஆரம்பத்தில், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் முன்வைத்த வாய்மூல அறிக்கை தொடர்பில் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் கூறியுள்ளதாவது,

இலங்கையின் தொடர் மனித உரிமை மீறல்களை ஆணையாளர் சுட்டிக்காட்டியிருப்பதை வரவேற்கும் அதேநேரம், இலங்கை தொடர்பான ஜெனிவாத் தீர்மானங்கள் எக்காரணங்களுக்காக உருவாக்கப்பட்டதோ அது இன்னமும் தொடர்ந்துகொண்டிருக்கின்ற வேளையில் அவை தொடர்பான குறிப்புகள் இல்லாமல் இலங்கையில் நடைபெற்று வருகின்ற தற்போதைய பரந்துபட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பிலேயே இந்த அறிக்கை அதிக கவனம் செலுத்தியிருக்கிறது என்பதைப் பாதிக்கப்பட்ட தரப்பினர் என்ற வகையில் நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

நிலைமை அவ்வாறு இருந்தபொழுதும் கூட, தமிழ் மக்கள் தொடர்ச்சியாக இலங்கை அரசால் நெருக்கடிக்குள்ளும் அடக்குமுறைக்குள்ளும் உள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த அரசானது மறுபுறத்தில் சர்வதேச அழுத்தங்களிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக பயங்கரவாதத் தடைச்சட்டத்தை மாற்றியமைப்பதற்காகவும் முன்னர் உருவாக்கிய ஆணைக்குழுக்களின் அறிக்கைகளைப் பரிசீலிப்பதற்கும் மற்றுமொரு ஆணைக்குழுவை நியமித்துள்ளது. அது மாத்திரமல்லாமல், காணாமல் ஆக்கப்பட்டோர்களுக்கான அலுவலகங்களைத் திறந்து வருவதாகவும் அவர்களுக்கு நட்டஈடு கொடுப்பதற்கு கடந்த நிதி ஆண்டில் நிதி ஒதுக்கியிருப்பதாகவும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதன் அடிப்படையில் ஐ.நா. சபையுடன் இணைந்து செயற்படத் தயாராக இருப்பதாகவும் இலங்கை அரசு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்துக்கு ஓர் அறிக்கையை சமர்ப்பித்திருக்கின்றது. இது வெறுமனே ஒரு கண்துடைப்பு மாத்திரமல்லாமல், காலத்தைக் கடத்தி, தமிழ் மக்களின் நீதிக்கான கோரிக்கைகளை நீர்த்துப் போகச் செய்வதற்கான ஒரு யுக்தியாகும். ஆனால், இவ்வாறான அறிக்கையொன்றை மனித உரிமைகள் ஆணையகமானது பரிவுடன் கவனத்தில் கொண்டுள்ளது மாத்திரமல்லாமல், இலங்கை அரசு அந்த விடயங்களைச் செய்யும் என்ற எதிர்பார்ப்பையும் வெளியிட்டிருக்கின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தின் ஆணையாளரின் கடந்த மார்ச் அறிக்கையானது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கும், தாங்கள் நிம்மதியாக வாழ்வோம் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தது. இலங்கை அரசின்மேல் முழுவதும் நம்பிக்கையிழந்து, கொல்லப்பட்டவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் கடந்த எட்டு வருடங்களுக்கு மேலாக உங்களை மட்டுமே நம்பிக் காத்திருக்கும் மக்களுக்கு மனித உரிமைகள் ஆணையகத்தின் இந்த அறிக்கை என்பது, மனச்சஞ்சலத்தையும் அமைதியின்மையையும் கவலையையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

ஒரு சில வாரங்களுக்கு முன்புதான் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக எந்தத் தேடுதலையோ வேறெந்த நடவடிக்கைகளையோ நடத்த வேண்டாம் என்று ஜனாதிபதி தெரிவித்திருக்கும் சூழ்நிலையில் இலங்கை அரசின் மேல் நம்பிக்கைகொண்டு, அவர்கள் அனைத்தையும் செய்வார்கள் என்று நம்பிக்கை தெரிவித்திருப்பது தமிழ் மக்களுக்கான நீதி கிடைக்காமல் போய்விடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ் மக்களுக்கு நீதி கிடைப்பதில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகம் தவறிழைக்காமல் செயற்பட வேண்டுமென்பதே தமிழ் மக்களின் ஆதங்கமாக இருக்கின்றது.

கடந்த மார்ச் மாத அறிக்கையிடுதலின் போது இலங்கை அரசுக்கு எதிராக பொருளாதார, பிராயணத் தடைகள் கொண்டுவரப்படுமாக இருந்தால், அது ஒட்டுமொத்தமான இலங்கை மக்களையும் பாதிக்கும் என்ற அடிப்படையில், அவ்வாறான தடைகளுக்குப் பதிலாக சர்வதேச சட்டங்களைப் பின்பற்றுகின்ற அரசுகள் தத்தமது நாடுகளில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகம் பரிந்துரை செய்திருந்தது. ஆனால் இந்த இடைப்பட்ட ஆறு மாதங்களில் தமிழ் மக்களின்மீது மோசமான அடக்குமுறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டதே தவிர, அச்சத்தின் மத்தியில் வாழ்கின்ற தமிழ் மக்களை அரவணைத்து அவர்களுக்கு நீதி கிடைப்பதற்கான எத்தகைய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

காலம் கடந்துபோவதற்கு முன்பாக இலங்கை அரசு தனது நாட்டின் ஒருபகுதி குடிமக்களுக்கு எதிராகச் செயற்பட்டது என்பதையும் இதனால் அவர்களில் .பல்லாயிரம் பேர் கொல்லப்பட்டார்கள் என்பதையும் ஐ.நா., சிங்கள மக்களுக்கு தெரியப்படுத்துவதன் மூலமாகவே இத்தகைய நடவடிக்கைகள் எதிர்காலத்தில் நடக்காதவாறு தடுப்பதற்கும் தமிழ் மக்களுக்கு உரித்தான நீதி கிடைப்பதற்கும் வழிவகுக்கும் என்று நம்புகிறோம்.

ஐ.நா.வின் மீதும் அதன் உறுப்பு அமைப்புகள் மீதும் தமிழ் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை ஐ.நாவும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகமும் காப்பாற்றும் என்று எதிர்பார்க்கின்றோம்,- என்று அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ஒ-இ)

# இலங்கையின் சுயாதீனத்தில் தலையிடுவது அவசியமற்றது

## ம.உ.ஆ. முன்னாள் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு.செப்.16

இலங்கையின் சுயாதீன விவகாரங்களில் மனித உரிமைகள் ஆணையகம் தலையீடு செய்வது அவசியமற்றது.

மனித உரிமைகள் ஆணையகம் இலங்கைக்கு எதிராகத் தொடர்ந்து இவ்வாறு செயற்படுமானால் அது கேலிக்குரிய விடயமாகவே இருக்கும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் பேராசிரியர் பிரதீபா மாஹானாம ஹேவா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை எவரேனும் ஒருவரால் அவருக்கு எழுதி வழங்கப்பட்ட அறிக்கையாக இருக்கக்கூடும். சுயாதீனத்தின் அதிகாரம் நாடாளுமன்றுக்குத்தான் உள்ளது. தேசிய ரீதியான பிரச்சினைக்கு தேசியப் பொறிமுறையில் தீர்வு காண முடியாதுபோனால் மாத்திரமே வேறு வழிகள் உள்ளன.

நாட்டில் அவரசாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் ஐ.நாவால் கேள்வியெழுப்ப முடியாது. நாட்டில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள உணவுகளை வெளிக்கொண்டு வரவே அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. நாடாளுமன்றில் அனுமதி பெறப்பட்டுத் தான் அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

1978 ஆம் ஆண்டு அரசமைப்பின் பிரகாரம் பொது மன்னிப்பு வழங்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குள்ளது. அதன் பிரகாரமே பொது மன்னிப்பு வழங்கப்படுகின்றது.

உலக நாடுகளில் பராக் ஒபாமா மற்றும் ட்ரம்ப் போன்றோரும் போர்க்குற்றச்சாட்டு உள்ளவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கிய சந்தர்ப்பங்களில் எவரும் கேள்வி கேட்கவில்லை.

அதேவேளை பயங்கரவாதத் தடைச்சட்டம் பற்றி பேசுகின்றனர். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தான் இலங்கையில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டது.

நல்லாட்சி அரசின் காலத்தில் நிறைவேற்றப்பட்ட 30/1 கீழ் பிரேரணை காரணமாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. அதற்கான இழப்பீட்டை இந்த அரசு செலுத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது - என்றார். (ஒ-4)

# இலங்கையின் உள்விடயத்தில் சர்வதேசம் தலையிட முடியாது

## ‘வீட்டோ’ அதிகாரத்துடன் சீனா நகர்வு

கொழும்பு, செப். 16



இலங்கையின் உள் விவகாரங்களில் மனித உரிமைகள் என்ற போர்வையில் சர்வதேச நாடுகள் தலையீடு செய்வதற்கு எமது எதிர்ப்பைப் பதிவு செய்கின்றோம் என்று 'வீட்டோ' அதிகாரத்தைத் தன்வசம் வைத்துள்ள நாடுகளில் ஒன்றான சீனா தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சீனாவின் தரப்பில் மேலும் தெரிவிக்கையில், மனித உரிமைகளைப் பாதுகாக்கவும், நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் பயங்கரவாதத்தை அடியோடு ஒழிக்கவும் மேற்கொண்ட முயற்சிக்கு இலங்கையை சீனா பாராட்டுகின்றது. இலங்கையின் உள்ளக விடயங்களில் மனித உரிமைகள் என்ற போர்வையில் சர்வதேச நாடுகள் தலையீடு செய்வதற்கு தனது எதிர்ப்பை சீனா பதிவுசெய்கின்றது - என்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பு ஆதிக்கம் செலுத்தும்வரை பொறுப்புக்கூறல் என்பது பகல்கனவே

## ஐ.நா. ஆணையரும் துரோகமிழைத்துவிட்டார் கஜேந்திரகுமார் எம்.பி. கடுமையாகச் சாடல்



**கொழும்பு, செப். 16**

**பாதிக்கப்பட்ட தரப்பான தமிழ் மக்களின் சார்பில் ஆதிக்கம் செலுத்தக் கூடிய தரப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்கும் வரையில், இறுதிப்போரில் இழைக்கப்பட்ட குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் என்பது வெறும் பகல்கனவே. இலங்கை அரசை கடந்த மார்ச் மாதம் கண்டித்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர், அந்த அரசின் கபடத்தனத்தை நம்பி இம்முறை ஆதரித்து பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு துரோகமிழைத்துள்ளார். இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டினார். ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

**9 ஆண்டுகளாக சொல்கிறோம்**

2012ஆம் ஆண்டிலிருந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒரு விடயத்தை திரும்பத் திரும்ப தெளிவாகச் சுட்டிக்காட்டிச் சொல்லி வந்திருக்கின்றது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் பொறுப்புக்கூறல் முடக்கப்பட்டிருக்கும் வரையில் அந்த விடயம் ஒப்பேறாது என்பதையே சொல்லிவந்திருக்கின்றோம். இலங்கை அரசின் ஒத்துழைப்பு இல்லாமல் ஒரு விடயத்தை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையால் ஒப்பேற்ற முடியாது.

இறுதிக்கட்டப்போரில் போர்க்குற்றங்களை மேற்கொண்ட இலங்கை அரசு ஒரு தரப்பாக இருக்கும் நிலையில் அவர்களிடமே விசாரணைக்கான பொறுப்பைக் கொடுப்பது என்பது இயற்கை நீதிக்கு முரணானது. எனவே ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஊடாக பொறுப்புக்கூறலை நிறைவேற்ற முடியாது.

இவ்வாறானதொரு நிலையில் மனித உரிமைகள் ஆணையாளர் இம்முறை தனது அறிக்கையில் இலங்கையின் இறுதிக்கட்டப் போரில் இடம்பெற்ற போர்க்குற்றம் தொடர்பில் விசேடமாக எதையும் குறிப்பிடவில்லை. இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொத்தம் பொதுவாகவே கவனம் செலுத்தியுள்ளார். அதாவது தமிழ் மக்களுக்குத் தேவையான பொறுப்புக்கூறல் விடயம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையால் ஓரங்கட்டப்பட்டுள்ளது.

**மனமாற்றம்**

ஐ.நா.வுடன் ஒத்துழைத்துச் செயற்படுவதாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வழங்கிய வாக்குறுதியை இலங்கை அரசின் மனமாற்றம் என்று குறிப்பிட்டு அரசின் அந்தப் போக்கை ஆணையாளர் வரவேற்றுள்ளார்.

இலங்கை தொடர்பில் மார்ச் மாதம் 46/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. அந்தத் தீர்மானம் பொறுப்புக்கூறலை உள்ளக விசாரணைக்குள் முடக்கியது. இலங்கை அரசு எப்படிப்பட்டது என்று தெரிந்தும், அதுவும் போர்க்குற்றத்தில் குற்றவாளியாக்கப்பட்ட ஒரு தரப்பாக இருந்தும் அவர்களிடம் அதனை ஒப்படைக்கும் வகையில் அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. இலங்கை அரசு ஒப்புக்கு, பொறுப்புக்கூறலை நிறைவேற்றும் வகையில் ஒரு நாடகத்தை நடத்தினாலும் அதனை நம்பக் கூடிய நிலைமையே ஏற்பட்டுள்ளது. இது தமிழ் மக்களுக்கு மிகப் பெரிய ஆபத்தான சூழல். மிக மோசமான துரோகத்தனமான நிலைமை.

**ஏன் பின்னடைவு?**

கடந்த மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அமர்வு நடைபெற்றபோது ஆணையாளர் உரையாற்றியிருந்தார். இலங்கை விவகாரத்தை மனித உரிமைகள் பேரவையிலிருந்து காத்திரமான நடவடிக்கைக்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் வரையில் கொண்டு செல்லவேண்டும் என்று சாரப்பட கருத்துரைத்திருந்தார். அப்படிக் கருத்துரைத்தவரின் கருத்தியல் இன்று மாற்றம் கண்டுள்ளது. இந்த மிகப்பெரிய பின்னடைவுக்கு என்ன காரணம்? யார் காரணம்?

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் பிரதி நிதிகளாக இருந்து கொண்டு, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் வெறுமனே தீர்மானம் நிறைவேற்றினால் போதும் என்று அதற்கு உடந்தையாகச் செயற்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் இந்தப் பின்னடைவுக்கு காரணம். தீர்மானத்தின் உள்ளடக்கம் என்ன என்பதைக் கருத்தில் கொள்ளாமல் வெறுமனே தீர்மானங்கள் நிறைவேற்றுவதற்கு ஆதரவு வழங்கி தமிழ் மக்களின் பொறுப்புக்கூறலை குழிதோண்டி புதைத்துள்ளார்கள். தமிழ் மக்களின் ஆதிக்க சக்தியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்கும் வரையில் பொறுப்புக்கூறல் என்பது வெறும் பகல் கனவுதான்.

**துரோகம்**

காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில், அவர்கள் எவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டார்கள், யாரால் காணாமல் ஆக்கப்பட்டார்கள், பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யார் என்பதை ஆராய வேண்டாம் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார். காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் பொறுப்புக்கூறலை கைவிடச் சொல்லியிருக்கின்றார். நாட்டின் ஜனாதிபதியான கோத்தாபய ராஜபக்ச, இந்த விடயத்தில் பிரதான குற்றவாளியாகக் கூறப்பட்டுவரும் நிலையில் பொறுப்புக்கூறலை கைவிடுமாறு அவரே கூறியிருக்கும் சூழலில், இலங்கையில் உருவாக்கப்பட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தை ஐ.நா. ஆணையாளரும், இணைக் குழு நாடுகளும் பாராட்டியுள்ளன.

உண்மையைக் கண்டறியும் செயற்பாட்டைக்கைவிடுமாறு நல்லாட்சி அரசும் கூறியிருந்தது. இப்போது கோத்தாபயவும் கூறுகின்றார். ஆனால் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தை ஆணையாளர் பாராட்டுகின்றார். இது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு செய்யும் பச்சைத் துரோகம். பாதிக்கப்பட்ட மக்களின் பொறுப்புக்கூறலை முடக்கும் செயற்பாடு இது.

**அரசின் அடாவடி**

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அமர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில், இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் வாய்மூல அறிக்கை வெளியாகும் நிலையில், சிறைக்கைதிகளின் பாதுகாப்புக்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சரே, சிறைச்சாலைக்குள் புகுந்து தமிழ் அரசியல் கைதிகளை முழந்தாளிடச் செய்து துப்பாக்கி முனையில் அச்சுறுத்தியிருக்கின்றார். ஐ.நா. மனித உரிமைகள் பேரவையால் எதுவும் செய்ய முடியாது என்ற உண்மை இலங்கை அரசுக்குத் தெரியும். அதனால்தான் அது இவ்வாறு நடந்து கொள்கின்றது.

இதன் பின்னரும் பொறுப்புக்கூறல் விடயத்தை பேரவைக்குள் முடக்காமல், சர்வதேச நீதிமன்றுக்குச் செல்வதற்கு ஒரே குரலில், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் பிரதிநிதிகள் செயற்படவேண்டும் - என்றார்.

(ஒ.5)

# ஆணையாளரின் அறிக்கை கவலையளிக்கின்றது

## ரெலோ தெரிவிப்பு

மன்னார், செப். 16

மார்ச் மாதம் இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் ஆணையாளர் முன்வைத்த அறிக்கை காத்திரமாக இருந்தது. ஆனால் தற்போதைய அறிக்கை பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு கவலையளிக்கும் விதத்தில் அமைந்துள்ளது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ அமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையை நிராகரிக்க முடியாது. ஆனால் கவலையளிக்கின்றது.

இலங்கை அரசு ஐ.நா.வுடன் ஒத்துழைக்க மறுத்த விடயங்களுக்கு இப்போது ஒத்துழைக்கத் தயார் என்று கூறிக்கொண்டு தமிழர் தாயகத்தில் அத்துமீறல்களை மேற்கொள்கின்றது. ஆனால் தமிழர் தாயகத்தில் இடம்பெறும் அத்துமீறல்கள் தொடர்பில் ஆணையாளர் கவனத்தில் கொள்ளாதது கவலையளிக்கின்றது. அரசியல் தீர்வு தொடர்பில் ஆணையாளர் மூச்சும் காட்டவில்லை.

இந்த நாட்டில் இடம்பெறும் இராணுவ ஆட்சி, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினை, ஆசிரியர்களின் போராட்டம் இவை அத்தனையும் ஒரு பிரச்சினையாக கூறப்பட்டுள்ளதே தவிர அரசு அவற்றை எல்லாம் உடனடியாகத் தீர்க்க வேண்டும் அல்லது நிறுத்த வேண்டும் என்கிற உத்தரவு எதுவும் அறிக்கையில் இல்லாமல் இருப்பது கவலையளிக்கிறது.

ஆணையாளரின் அறிக்கையின் ஊடாக நாங்கள் எதிர்பார்க்கின்ற சர்வதேசம் என்கிற விடயம் கை விட்டுப் போய் விடுமோ என்கின்ற கேள்வி எங்கள் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

அதனை விட இலங்கை அரசை நம்புவதாகவும், புதிதாக தெரிவு செய்யப்பட்ட வெளிவிவகார அமைச்சர் நல்லதொரு மனிதர் என்கின்ற போர்வையில் அவரை புகழ்ந்து பேசுகின்ற ஒரு நிலையும் அரசுக்கு கால அவகாசத்தை வழங்குகின்றது போன்ற ஒரு நிலையும் காணப்படுகிறது.

இந்த ஜனாதிபதியும் அரசும் இருக்கும் வரை தமிழ் பேசும் மக்களுக்கு நியாயம் கிடைப்பதற்கான வாய்ப்பு இல்லை. கால தாமதத்தை ஏற்படுத்துகின்ற வாய்ப்பாகவே இருக்கும் - என்றார். (ஒ-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குமாறு மீண்டும் சர்வதேச ரீதியில் அழுத்தம்

**கொழும்பு, செப். 16**

**இலங்கையில் நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தை உடனடியாக மீளெடுக்குமாறு மீண்டும் சர்வதேச ரீதியில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 48ஆவது அமர்வு கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகியுள்ள நிலையில், சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை அரசாங்கத்திடம் பயங்கரவாத தடைச் சட்டத்தின் பயன்பாட்டை நிறுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசிய வலய அலுவலகத்தின் உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்தில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள நூற்றுக் கணக்கானவர்களின் குடும்பங்க ளின் வாழ்க்கை சிதறடிக்கப்பட்டுள் ளது என்று சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

இவ்வாறான சூழலில் பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பயன்படுத்துவதை உடனடியாக நிறுத்துமாறு சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது. (ஐ-இ)

## இத்தாலியில் சிங்களவர்கள் மஹிந்தவுக்கு எதிர்ப்பு

கொழும்பு,செப்.16

இத்தாலி சென்றுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கு அந்த நாட்டில் உள்ள இலங்கைச் சிங்களவர்கள் கறுப்புக் கொடி ஏந்தி எதிர்ப்புத் தெரிவித்தனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ராஜபக்சக்கள் அல்லது இலங்கைத் தலைவர்கள் வெளிநாடு செல்லும் போது விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆதரவாளர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்யும் காலம் மாறி, இன்று ராஜபக்சக்கள் வெளிநாடு செல்லும் போது வெளிநாட்டில் உள்ள சிங்களவர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு இத்தாலியில் ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் தற்போதைய ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டுவந்தவர்களே.

உள்நாட்டில் அவசரகாலச் சட்டம் போட்டு மக்களின் ஆர்ப்பாட்டத்தை முடக்க முற்பட்டாலும் வெளிநாட்டில் உள்ள இலங்கையர்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முடக்கமுடியாது - என்றார். (ஐ-இ)

## கோடா வைத்திருந்தோருக்கு ரூ. ஒன்றரை லட்சம் தண்டம்

*மற்றொருவருக்கு 25 ஆயிரம் தண்டம்*

யாழ்ப்பாணம், செப். 16

196 லீற்றர் கோடாவுடன் கைது செய்யப்பட்டவர்களுக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது நீதிமன்று.

196 லீற்றர் கோடா வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் சுழிபுரத்தைச் சேர்ந்த இருவர் கடந்த 12ஆம் திகதி வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர். அவர்கள், விசாரணையின் பின்னர் மல்லாகம் நீதிவானிடம் நேற்றுமுன்தினம் முற்படுத்தப்பட்டிருந்தனர். அதன்போதே அவர்களுக்குத் தலா 75ஆயிரம் ரூபா வீதம் ஒன்றரை லட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

அத்துடன், கடந்த 10ஆம் திகதி, தொல்புரம் வீராவத்தைப் பகுதியில் 10 லீற்றர் கோடா மற்றும் ஒரு லீற்றர் கசிப்பு வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் வட்டுக்கோட்டைப் பொலிஸார் ஒருவரைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் முற்படுத்தினர். அவருக்கு 25ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (த-27)

*20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு*

## தடுப்பூசி வழங்குவதில் பெரிய சிக்கல் நிலை

*பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவிப்பு*



கொழும்பு.செப்.16

இலங்கையில் 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி வழங்குவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் 20 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்களுக்கான கொரோனாத் தடுப்பூசி வழங்கும் செயற்பாடு கடந்த வாரம் நாட்டின் சில பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிலையில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் கல்வியைத் தொடரவுள்ள மாணவர்கள் பலர் எழுத்துமூர்வ அல்லது பிற ஆவணங்களுடன் விரும்பிய தடுப்பூசியைப் பெற முயற்சிப்பதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

எனவே இவ்வாறான பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வை வழங்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-இ)

## 200 க்கும் குறைவான மாணவர்களை கொண்ட பாடசாலையை திறக்கவும்

*நிபுணர் குழு மீண்டும் பரிந்துரை*

கொழும்பு,செப்.16

200க்கும் குறைவான மாணவர்களின் எண்ணிக்கை கொண்ட பாடசாலைகளை அடுத்த மாதத்தில் மீண்டும் திறக்கமுடியும் என்று நிபுணர் குழு பரிந்துரைத்துள்ளது.

கொரோனாத் தடுப்புச் செயலணியுடன் இணைந்த இந்தக் குழுவால் எட்டப்பட்ட பரிந்துரைகள் நாளை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

200 க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட கிராமப்புறங்களில் உள்ள சுமார் 3 ஆயிரம் பாடசாலைகளை மீண்டும் திறக்கமுடியும் எனஆரம்பத்தில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியிருந்தது.

12 தொடக்கம் 18 வரையான வயதுடைய மாணவர்களுக்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரையின்படி பைசர் தடுப்பூசியை செலுத்த வேண்டும் என்ற பரிந்துரையும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால் முன்வைக்கப்பட்டது.

அதன்படி மாணவர்களுக்கு தடுப்பூசி செலுத்துவதற்காக ஒக்ரோபர் மாதத்தில் இலங்கைக்கு பைசர் தடுப்பூசியின் 4 மில்லியன் டோஸ் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ-இ)

*சதொசவுக்கு வழங்கும் போர்வையில்*

## தனியார் வர்த்தகருக்கு வெள்ளைப் பூண்டுகள்!

*குற்றப்புலனாய்வினரிடம் முறைப்பாடு*

கொழும்பு, செப். 16

துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்பட்ட இரண்டு வெள்ளைப்பூண்டுக் கொள்கலன்களை லங்கா சதொசவுக்கு வழங்கும் போர்வையில் வேறு ஒரு வர்த்தகருக்கு வழங்கப்பட்டமை தொடர்பில் அந்தக் கொள்கலன்களை இறக்குமதி செய்த நிறுவனம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்று முறைப்பாடு செய்தது.

இந்தக் கொள்கலன்களை இறக்குமதி செய்த நிறுவனம், தான் இறக்குமதி செய்த 18 கொள்கலன்களில் 2 கொள்கலன்கள் திருட்டுத்தனமாக துறைமுகத்தில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது என்று குற்றஞ்சுமத்தியுள்ளது. இதையடுத்தே அந்த நிறுவனத்தின் அதிகாரிகள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்று முறைப்பாடு செய்தனர்.

துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்பட்ட இரண்டு கொள்கலன்களிலும் இருந்த வெள்ளைப்பூண்டு திருட்டுத்தனமாக வர்த்தகர் ஒருவருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளமை நுகர்வோர் விவகார அதிகார சபை மேற்கொண்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம)

# நரியிடம் கோழிக் கூண்டை ஒப்படைப்பதற்குச் சமன்

*கப்ரால் நியமனம் தொடர்பில் ஹந்துனெத்தி தெரிவிப்பு*

கொழும்பு,செப்.16

அஜித் நிவாட் கப்ராலுக்கு மத்திய வங்கி ஆளுநர் நியமனத்தை வழங்குவதானது நரியிடம் கோழிக் கூண்டை ஒப்படைப்பதைப் போன்ற செயலாகும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்துள்ளார்.

அரசியல்வாதி ஒருவருக்கு அல்லது அரசியலில் ஈடுபடுகின்ற நபரொருவருக்கு மத்திய வங்கி ஆளுநராக பதவி வகிக்கக்கூடிய உரிமை இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு ஒருதொகுதி மருத்துவ உபகரணங்களை நன்கொடையாகக் கையளித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிராக பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் பல முன்வைக்கப்பட்டுள்ளன. அரசியல்வாதி ஒருவர் மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட்டால் அது மத்திய வங்கியின் சுயாதீனத் தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தும். நாட்டின் பொருளாதாரம் மற்றும் நிதி ஸ்திரத்தன்மையைப் பேணும்



நிறுவனமான மத்திய வங்கி சுயாதீனமானதாகும்.

இவ்வாறான நிறுவனத்தின் பிரதானியாக நிதி இராஜாங்க அமைச்சராகச் செயற்பட்ட நபர் அந்தப் பதவியிலிருந்து விலகி ஆளுநராக பதவியேற்றதால் நிச்சயம் அரசாங்கத்தின் தலையீடுகள் காணப்படும் என்பதை உறுதியாகக்கூற முடியும் - என்றார். (ஐ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத நல்லிணக்கத்தை கெடுக்கும் செயற்பாடு

## சைவ மகாசபை கடும் கண்டனம்

யாழ்ப்பாணம்,செப்.16

மத நல்லிணக்கத்துக்கு ஊறுவிளைவிக்கும் வகையில், மடுப் பிரதேசத்தில் பிள்ளையார் சிலை அகற்றப்பட்டு, அந்தோனியார் சிலை வைக்கப்பட்டுள்ளது என்று சைவமகாசபை கடும்கண்டனம் வெளியிட்டுள்ளது. இது தொடர்பான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக இந்துக்களின் வழிபாட்டு உரிமைகள் மீது மேற்கொள்ளப்படும் மிலேச்சத்தனமான சம்பவங்கள் வேதனையை ஏற்படுத்தியுள்ளன.

மடுப்பிரதேச செயலகப் பிரிவில் பழம்பெரும் சைவத் தமிழ் கிராமங்களை உள்ளடக்கிய வகையில் மூன்றில் இரண்டு பங்கினர் சைவ மக்களாகவே காணப்படுகின்றனர். அவர்கள் ஏனைய மத மக்களுடன் நல்லிணக்கத்துடனேயே வாழ்ந்து வருகின்றனர். இருப்பினும் திருக்கேதீச்சர வளைவு தகர்க்கப்பட்டது போன்று அவ்வப்போது வணக்கஸ்தலங்களில் சிலைகள் களவாடப்படுவது, சேதமாக்கப்படுவது தொடர்கதையாக உள்ளது. இந்த விடயத்தில் குற்றவாளிகள் உடனடியாகக் கண்டறியப்பட்டு, சட்டத்தின் முன் நிறுத்தப்படுவதுடன், பின்னணியும் ஆராயப்பட வேண்டும் - என்றுள்ளது. (ஒ-4,20)

# புதிய நிதிச்சட்ட நடைமுறையை கண்காணிக்காவிட்டால் ஆபத்து!

## ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் சுட்டிக்காட்டு

**கொழும்பு, செப். 16**

**இலங்கையில் நிறைவேற்றப்பட்டுள்ள புதிய நிதிச்சட்டம் தொடர்பில் கவனம் செலுத்தப்படுகின்றது. இந்தச் சட்டம் தனிநபர்களின் வெளிப்படுத்தப்படாத வருமானம் மற்றும் சொத்துக்களுக்கு வரிவிலக்கு வழங்குவதை நோக்காகக் கொண்டுள்ளது. அவற்றை அவதானிக்க உரிய ஒழுங்கமைக்கப்பட்ட அதிகார சபைகள் மேலதிக நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் இந்தச் சலுகையானது தவறான முறையில் பயன்படுத்தப்படலாம்.**

இவ்வாறு ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீ லங்கா தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வரிவிலக்கு செயற்பாட்டின் கண்காணிப்பை மேம்படுத்த வேண்டும். அதற்காக சில விடயங்களைப் பரிந்துரைக்கின்றோம். பணத் தூய்தாக்கல் தடுப்பு மற்றும் பயங்கரவாத நிதி தடுப்பு போன்ற எதிர்ப்பு நடவடிக்கைகளை திறம்பட பயன்படுத்துவதை உறுதி செய்தல், சம்பந்தப்பட்ட உள்நாட்டு அதிகார சபைகளுக்கிடையே ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பை உறுதி செய்தல், கறுப்புப் பண பரிமாற்றத்தைக் கண்காணிக்க பாதுகாப்பான சர்வதேச ஒத்துழைப்பைப் பெறல் போன்றவை பரிந்துரைக்கப்படுகின்றன.

சரியான மூலத்தினூடாக பெறப்பட்ட தனிநபர்களின் பணத்தை எவ்வித தடையுமின்றி நாட்டுக்குள் கொண்டுவரமுடியும் என்பதை உறுதி செய்யும் அதேவேளை சட்டவிரோத வழிமுறைகளால் பெறப்பட்ட பணம் நாட்டுக்குள் நுழைவதை கடினமாக்கும் நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதை உறுதி செய்யவேண்டும்.

சட்டத்தின் கூறுகளில் உள்ள இரகசியத்தன்மை நிறுவனங்களுக்கு இடையேயான ஒத்துழைப்புக்கு இடையூறாக இல்லை என்பதை உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் உறுதி செய்ய முயற்சிக்க வேண்டும்.

நாட்டுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடியவர்களால் இந்த வரி விலக்கு தவறாகப் பயன்படுத்தப்படாமல் இருப்பதை உறுதி செய்தல் மற்றும் இவ்வாறான துஷ்பிரயோகங்களைத் தவிர்ப்பதற்குக் கட்டமைக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக மேலே குறிப்பிடப்பட்ட பரிந்துரைகளை செயற்படுத்த அனைத்து சட்ட அமுலாக்க மற்றும் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைகளுக்கும் அழைப்பு விடுக்கப்படுகின்றது - என்றுள்ளது. (எ-இ)



# சொந்த ஊரில் மணல் இல்லை

கிளிநொச்சி, செப்.16

சொந்த ஊரில் போதுமான மணல் இருந்தும் அவற்றை தமது தேவைக்குக் கொள்வனவு செய்ய முடியாத நிலைமையை மக்கள் எதிர்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த பல கிராமங்களில் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

தமது கிராமங்களில் 2 கிலோ மீற்றர் அல்லது 3 கிலோ மீற்றர் தூரமளவில் போதுமான மணல் காணப்படுகின்ற போதும், அவற்றைப் பெற முடியாதுள்ளனர்.

ஓர் உழவு இயந்திரம் மணலை 10 ஆயிரம் ரூபாவுக்குக் கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது. அத்துடன் வாகனங்களின் கூலியும் அதிகரித்துள்ளது.

அதேவேளை வெளிமாவட்டங்களுக்கு எவ்வித தடையும் இன்றி போதுமான மணல் கொண்டு செல்லப்படுகின்றது. எனவே இது தொடர்பான அதிகாரிகள் மணலுக்கான விலையை நிர்ணயித்து, குறைந்த விலையில் மணலைப் பெற்று வீட்டுத்திட்டங்களை நிறைவு செய்ய உள்ளூர் கிராம மக்களுக்கு உதவவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-4,113)

# கிராம நூலகங்களின் சமகாலத் தேவைகள்

## இணையமூடாக ஆராய்வு

கிராமிய நூலகங்களின் சமகாலத் தேவைகள் தொடர்பான இணைய வழிக் கலந்துரையாடல் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. ஈழத்து நூல்களின் பதிப்புக்கள் தொடர்பில் அக்கறையுடன் செயற்பட்டு வரும் 'எங்கட புத்தகங்கள்' வெளியீடாக, இவ்வாண்டு வெளிவந்த நூலியலாளர் என். செல்வராஜாவின் "நமக்கென்றொரு பெட்டகம்" என்கிற நூல் பற்றிய அறிமுகத்தின் தொடர்ச்சியாக இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

கலந்துரையாடலில் கிராமங்களில் நூலகங்கள் பண்பாட்டு வெளியாக இயங்க வேண்டியதன் அவசியம் மற்றும் அவ்வாறு அமைய வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

அத்துடன் கிராமிய நூலகங்களை உருவாக்குவதில், கொண்டு நடத்துவதில் இருக்கக்கூடிய சவால்கள், அவற்றை எதிர்கொள்வதற்கான வழிமுறைகள், பொறிமுறைகள் என்பன தொடர்பிலும் ஆராயப்பட்டன.

நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதில் நூலகர் கலாநிதி திருமதி கல்பனா சந்திரசேகர், விதை குழுமச் செயற்பாட்டாளர் அருண்மொழிவர்மன் ஆகியோர் மேற்குறித்த புத்தகம் பற்றிய தங்களுடைய கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். அத்துடன் புத்தகத்தின் ஆசிரியரும் நூலியலாளருமான என். செல்வராஜா "கிராமிய நூலகங்களும் அவற்றின் சமகாலத் தேவைகளும்" என்ற தலைப்பில் உரையாற்றினார். நிகழ்வை விதை குழுமச் செயற்பாட்டாளர் கிரிசாந் ஒருங்கிணைத்திருந்தார். (ஒ-4)

# தியாகி அறக்கொடையால் இலவசமாக பிரேதப்பெட்டி

யாழ்ப்பாணம், செப்.16

யாழ். மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடங்குகளை முறையாக, மயானத்தில் தகனம் செய்வதற்கு, இலவசமாக பிரேதப் பெட்டிகளை வழங்கி உதவ தியாகி அறக்கொடை நிதிய ஸ்தாபகத் தலைவர் வாமதேவன் தியாகேந்திரன் முன்வந்துள்ளார்.

மாவட்டத்தில் பொருண்மியம் நலிந்தவர்களுக்கு உதவும் முகமாக, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் அடையாளப்படுத்தப்படும் குடும்பங்களுக்கு இந்த உதவி வழங்கப்படும்.

நிறுவனத்திடம் அனுமதியைப் பெற்றுக் கொள்பவர்கள், யாழ். பிரதான வீதியில் உள்ள பிரபல கடையில் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான மரப் பிரேதப் பெட்டியை இலவசமாகப் பெற்றுக்கொள்ளமுடியும். அவர்கள் யாழ்.மாநகர சபைக்குரித்தான தகன மயானத்தில் இலவசமாக எவ்வித கொடுப்பனவும் இன்றி சடலத்தைத் தகனம் செய்து கொள்ளலாம் என்று நிறுவனத்தின் ஒருங்கிணைப்பாளர் கந்தசாமி கருணாகரன் தெ வித்துள்ளார். (ஒ-4,50)

# அடுத்த வாரம் நாடு வழமைக்கு

கொழும்பு,செப்.16

சில கட்டுப்பாடுகளுடன், அடுத்த வாரம் நாட்டைத் திறப்பதற்கான வாய்ப்பு உள்ளது என்று கொவிட் தடுப்புச் செயலணியின் பிரதானியும், இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் நடைபெறும் கொவிட் தடுப்புக்கான செயலணிக் கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தின் போது இறுதி முடிவு எடுக்கப்படும். நாட்டை எவ்வாறு திறப்பது என்பது தொடர்பான பரிந்துரை இந்த வாரம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்படும்.

குறித்த பரிந்துரைகளின் படி நாட்டைத் திறப்பது தொடர்பில் முடிவு எடுக்கப்படும்.

எனினும் மாகாணங்களுக்கு இடையேயான பயணக் கட்டுப்பாடுகள் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4)

# கட்சித் தலைவர்கள் கூட்டம் நாளை


கொழும்பு, செப். 16

நாடாளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழு நாளை பிற்பகல் 3 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடவுள்ளது. செப்ரெம்பர் மாதத்துக்கான இரண்டாம் வார நாடாளுமன்ற அமர்வை முன்னெடுப்பது தொடர்பிலும், சபை நிகழ்ச்சி நிரல் சம்பந்தமாகவும் இதன்போது ஆராயப்பட்டு தீர்மானம் எடுக்கப்படவுள்ளது. (ஒ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் திரு. முருகேசு இராசையா



தோற்றம்
10 . 04 . 1931

மறைவு
17 . 08 . 2021

எங்கே வாழ்க்கை தொடங்கும்
அது எங்கே எவ்விதம் முடியும்
இது தான் பாதை
இது தான் பயணம்
என்பது யாருக்கும் தெரியாது
பாதையெல்லாம் மாறிவரும்
பயணம் முடிந்துவிடும்
மாறுவதைப் புரிந்து கொண்டால்
மயக்கம் தெளிந்து விடும்.

எங்களுடன் எங்களுக்காய் வாழ்ந்த
எங்கள் தெய்வமே
இனி எங்கு காண்போம் உங்களை
31 நாட்கள் ஓடி மறைந்தாலும்
உம் நினைவுகள் எம்மை விட்டு அகலாது

இன்று (16.09.2021) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

64/A, திருநகர் வடக்கு,
கிளிநொச்சி.
T.P: 077 657 8547
077 45 66 776

**பிரிவால் துயருறும்**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரபிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணுலகில்
17 . 06 . 1965



விண்ணுலகில்
18 . 08 . 2021

### யோகானந்தம் கோமதி

எம் குடும்பத்தின் குலவிளக்கே!
உமக்காய் துடிக்கும் பாசமான குடும்பத்தை - எதற்கு விட்டுச் சென்றீர்
பாசமான கணவன், அன்பான பிள்ளைகள்
அக்கறையான மருமக்கள்
ஆசையாய் கொஞ்சும் பேரப்பிள்ளைகள்
அனைவரும் துடிதுடித்து நிற்கின்றோம். உமக்கு கேட்கிறதா?
நாம் அழுவது உமக்கு கேட்கின்றதா?
தன்னடக்கம், மரியாதை, பாசம் காட்டுவது
யார் வந்தாலும் பாசத்தோடு வரவேற்று உபசரித்து மகிழ்வீரே?
இப்படி நற்குணங்கள் சொல்லிக் கொண்டே போகலாம்
யார் என்ன சமாதானம் சொன்னாலும் உம் இழப்பை
எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது கலங்கி நிற்கின்றோம்.

எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்திகேட்டு நேரில் வந்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்களிற்கும் மற்றும் தொலைபேசி, சமூக ஊடகங்கள் மூலம் அனுதாபங்களை தெரிவித்து ஆறுதல் கூறிய அன்பு நெஞ்சங்களிற்கும் மற்றும் அனைத்து வழிகளிலும் உதவிய அன்பு நெஞ்சங்களிற்கும் எமது இதயபூர்வமான நன்றிகள்.

என்றும் உங்கள் நினைவுகளுடன் .....
**கணவன்,**
**பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

# மரண அறிவித்தல்

## திருமதி கந்தசாமி தையல்நாயகி



கொண்டலடி கஸ்தூரியார் வீதியைப் பிறப்பிடமாகவும் கனடா Markham யாழ்ப்பாணம் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி தையல்நாயகி அவர்கள் கடந்த (12.09.2021) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுவாமிநாதர் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை வள்ளியம்மை தம்பதியரின் மூத்த மருமகளும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை கந்தசாமி அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, தங்கராசா, இராசதுரை மற்றும் இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கனகம்மா, நடராஜா, சுப்பிரமணியம், லோகசுந்தரம், இராசரத்தினம் மற்றும் விமலாதேவி, செல்வராணி, கணேசலிங்கம் ஆகியோரின் மைத்துனியும், பிறேமச்சந்திரன் (இலங்கை), ஜெயச்சந்திரன் (கனடா), ஞானச்சந்திரன் (நோர்வே), பாலச்சந்திரன் (இலங்கை), இராமச்சந்திரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற தேவச்சந்திரன், ஜீவச்சந்திரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற ஜெபிச்சந்திரன், புவிச்சந்திரன் (ஜேர்மனி), செல்வச்சந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், லங்காதேவி, குணவதி, சுகந்தினி, புஷ்பரஞ்சனா, ராகினி, மஞ்சுளா, மணிமேகலை, பொற்செல்வி ஆகியோரின் அன்பு மாமியாரும், வசந்தலா, சந்திரகலா, பிரபாகர், வற்சலா, பிரஜாந், ஜெயரதன், சதீஸ், நிவேதன், திவேதன் துளசித், நிரூபன், நிதுலா, சமிலா, சுதர்சன், செந்துஜன், இந்துஜா, சஜந்தன், ஜெனினா, அபிநயா, பாலகுமரன், சாஜித், ஆதியா, வினுசா, சாருமதி ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும், ஆருஸ் கமிதா, அபிரா, சதுஜா, திவ்யா, பவின், பிரதிஷா, பிரவீனா, மேகஜா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.09.2021) வெள்ளிக்கிழமை மு.ப. 9.00 மணியளவில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு**
**சண்முகா - மகன்** Mobile : +94778483810
**பவா - மகன்** Mobile : +16476696021
**துரை - மகன்** Mobile : +4799713980
**ஜெயா - மகன்** Mobile : +4917674978921
**ஜீவா - மகன்** Mobile : +4917636397814
**ராயு - மகன்** Mobile : +4917634127291
**ரூபன் - மகன்** Mobile : +16475308871
**சந்திரன் - மகன்** Mobile : 077 320 7834
**பிரபா - பேரன்** Mobile : +94776029417

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VACANCY

Company : Sarukaya Construction (Pvt) Ltd
(CIDA grade C4)
Project Location : Jaffna, Mallavi Salary :Negotiable

**PROJECT ENGINEER**
Civil Engineering Degree with five years Experience in Building Sector

**TECHNICAL OFFICER**
HNDE (Civil), NCT (Civil) or Equivalent with 3 Years Experience in Building, Pipe laying work.

Please forward your CV with details to **vacancynsc@gmail.com** with two non related referees in 7 days.



# மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1987 இல் பூராடம் நட்சத்திரம் 6ல் சூரியன் செவ்வாய் கிரகபாகம் 27 1/2, உயரம் 165 CM உடைய அரச துறையில் பொறியியலாளராக (குடியியல்) கடமை யாற்றும் நற்பண்புள்ள மணமகனுக்கு அழகிய உயர் தொழிலில் உள்ள மண மகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு: **077 292 4478**


# கொரோனா சடலத்துடன் சென்ற வாகனம் விபத்து

முல்லைத்தீவு, செப். 16

முல்லைத்தீவு மாவட்டத்தில் உயிரிழந்த கொரோனாத் தொற்றாளர் ஒருவரின் சடலத்தை, திருகோணமலைக்குக் கொண்டுசென்றுகொண்டிருந்த வாகனம் முல்லைத்தீவுகொக்குளாய் வீதியில் நேற்று விபத்துக்குள்ளானது.

இதன்போது சாரதி படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். வாகனமும் புரண்டு சேதத்துக்குள்ளானது.

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்குச் சொந்தமான வாகனமே விபத்துக்குள்ளானது. அந்த வாகனமும் முச்சக்கர வண்டியும் மோதி விபத்து இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. சடலத்தை திருகோணமலைக்கு கொண்டுசெல்ல மாற்று ஏற்பாடு செய்யப்பட்டது. முல்லைத்தீவு பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (சு-19)



# கண்ணீர் அஞ்சலி

## சின்னப்புநாயகம் லோறன்ஸ் சவுந்தரநாயகம்

**(ஓய்வுபெற்ற கணித ஆசான்)**



அமரர் சின்னப்புநாயகம் லோறன்ஸ் சவுந்தரநாயகம் அவர்கள் நீண்ட காலம் யா/புனித சாள்ஸ் ம.வி.யில் கணித பாட ஆசானாகப் பணியாற்றியவர். முன்னாள் அதிபர் திருமதி பி.எவ். சின்னத்துரை அவர்களின் பதவிக் காலத்தில் பாடசாலையின் கல்வி முன்னேற்றத்திற்கும் இன்னும் பல விடயங்களிற்கும் அதிபரோடு இணைந்து தோளோடு தோள்கொடுத்துச் சிறப்பித்த பேராசான்.

அக்காலத்தில் அவருடன் பணியாற்றிய ஏனைய ஆசிரியர்களோடு நட்புறவைப் பேணி பாடசாலையில் நடைபெற்ற அனைத்து விழாக்களையும் சிறப்புற நடாத்தி பாடசாலைக்குப் பெருமை சேர்த்த செயல்வீரன் என்றால் அது மிகையல்ல.

அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரது ஆன்மா இறை சந்நிதானத்தில் நித்திய இளைப்பாறப் பிரார்த்திக்கின்றோம்.

**முன்னாள் அதிபர் பி.எவ்.சின்னத்துரையும்**
**அவரோடு பணியாற்றிய ஆசிரியர்களும்**

# மரண அறிவித்தல்



## திருமதி நாகேந்திரம் தங்கமுத்து

கரவெட்டியை பிறப்பிடமாகவும் தற்போது நீர்வேலியை வசிப்பிடமாக கொண்ட நாகேந்திரம் தங்கமுத்து 2021.09.13 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லர் மாணிக்கம் தம்பதியினரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி சரஸ்வதி தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற நாகேந்திரத்தின் அன்பு மனைவியும், சுகந்தினியின் (தேர்தல்கள் அலுவலகம், யாழ்ப்பாணம்) அன்புத் தாயும், திரிகரனின் (அதிபர், புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி) அன்பு மாமியும், சௌமியா, ஆரூரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற சின்னத்தம்பி, காலஞ்சென்ற இராசம்மா, மற்றும் கிருஸ்ணபிள்ளை ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் நாளை (2021.09.17) வெள்ளிக்கிழமை கோம்பயன் இந்து மயானத்தில் நடைபெறும்.

**பழைய தபாற் கந்தோர் ஒழுங்கை,**
**நீர்வேலி.**

**தகவல்:**
**சி.திரிகரன்**
**077 614 2597**

# மரண அறிவித்தல்

## சுந்தரலிங்கம் மகேஸ்வரி

**தோற்றம்:31.05.1945** **மறைவு:10.09.2021**



காரைநகர் கருங்காலியைப் பிறப்பிடமாகவும் கஸ்தூரியார் வீதி நீராவியடி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் மகேஸ்வரி அவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை (10.09.2021) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துறம்பு விசாலட்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (உதவி அரசாங்க அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (17.09.2021) வெள்ளிக்கிழமை மதியம் 3.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 30.07.1940 மறைவு 17.08.2021

## அமரர் அருணாசலம் இந்திராணி

நீங்கள் இல்லை என்றால் நாமும் இல்லை
ஆனால் நீங்கள் இல்லா உலகில் மட்டும்
தனியாக தவிக்கவிட்டு சென்றீர்களே!
ஏதோ ஒன்றை தொலைத்தது போல
என்னவோ ஒன்று தொலைந்தது
போல
தொலைத்ததும் தெரியாமல்
தேடவும் முடியாமல்
தனியாக தவிக்கின்றோம் இங்கே நாங்கள்.

**9/7, அன்னசத்திர லேன்,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

**-குடும்பத்தினர்-**

# யாழ்ப்பாணம் மாநகரசபை

## யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் உள்ள நகரக்குள கடைத் தொகுதிக்கும் - ஸ்ரான்லி வீதிக்கும் இடைப்பட்ட நகரக்குளப் பகுதியில் கார் தரிப்பிடம் அமைத்து குத்தகைக்கு வழங்குவதற்கான விலைமனுக் கோரல்

**BID: NO- JMC/MB/CP/2021-01**

1) யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதிக்கும் ஸ்ரான்லி வீதிக்கும் இடையிலான நகரக்குளப்பகுதியில் கார்த்தரிப்பிடம் அமைத்து 10 வருட காலப்பகுதிக்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2) கார் தரிப்பிடத்திற்கான கேள்விகோரலில் கஸ்தூரியார் வீதி, மின்சாரநிலையவீதி மற்றும் ஸ்ரான்லி வீதியில் கடைகள் உள்ள வர்த்தகர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.
3) கஸ்தூரியார் வீதிக்கும் நகரகுளத்திற்கும் இடையில் அமைக்கப்படும் கார் தரிப்பிடத்தில் 14 கார்த்தரிப்பிடங்கள் நகரக்குள கடைத்தொகுதியில் உள்ள வர்த்தகர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும். அவர்களிடம் இருந்து கேள்விகிடைக்காத பட்சத்தில் ஏனையவர்களுக்கு வழங்கப்படும்.
4) **விலை மனுக் கோரப்படும் குத்தகைக்கு வழங்கப்படவுள்ள கார்த்தரிப்பிட விபரம் வருமாறு.**

| 29 கார் தரிப்பிடங்களின் நிலப்பகுதி | தரைப்பிரதேசம் ஒவ்வொரு தரிப்பிடத்திற்குமான (சதுர அடி) | ஒவ்வொரு தரிப்பிடத்திற்குமான அடிப்படை கேள்வித்தொகை (நன்மதிப்பு) ரூபா | ஒவ்வொரு தரிப்பிடத்திற்குமான மாதாந்த வாடகை (ரூபா) | ஒவ்வொரு தரிப்பிடத்திற்குமான பிணைமுறி (ரூபா) |
|---|---|---|---|---|
| A 1-A 24 (24 தரிப்பிடம்) | 142 | 500,000 | 1,250 | 5,000 |
| B 1-B 5 (5 தரிப்பிடம்) | 142 | 500,000 | 1,250 | 5,000 |

5) 1. சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களில் அதிகூடிய அடிப்படை விலையைக் கவனத்தில் கொண்டு குத்தகைதாரர் தேர்ந்தெடுக்கப்படுவார்.
2. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற விண்ணப்பதாரிகள் குறித்த விபரங்கள், உள்ளடங்கிய விண்ணப்பங்களை, மீளளிக்கப்படாத ரூபா 2000/= இனை செலுத்தி மாநகரசபையின் நானாவித இறைவரிப் பகுதியில் 2021.09.17 முதல் 2021.10.07 ம் திகதி வரை வாரத்தின் வேலைநாட்களில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 2.00 மணி வரையான காலத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
3. விண்ணப்பதாரர் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் தொகையை பிணைமுறியாக மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியில் செலுத்தி பற்றுச்சீட்டினை விண்ணப்பபடிவத்துடன் இணைத்தல் வேண்டும்.
4. விலைமனுக்களை ஏற்றல் 2021.10.08 ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முடிவடைவதுடன் மாநகர சபையின் பௌதீகதிட்டமிடல் கேட்போர் கூடத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரிகள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் இதற்காக சமுகமளிக்கலாம். குறித்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

6). இது பற்றிய மேலதிக தகவல்கள் அல்லது தெளிவுபடுத்தல்கள் தேவைப்படின் யாழ்ப்பாணம் மாநகர சபை நானாவித இறைவரிப்பகுதி 021-2215978 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்புகொள்வதன் மூலமும் அல்லது அலுவலக நேரங்களில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 2.00 மணிவரை நேரில் சமுகமளிப்பதன் மூலம் தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிவரவுத் திணைக்கள அலுவலகங்கள் திறப்பு

கொழும்பு, செப்.16

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக் களத்தின் 4 பிராந்திய அலுவலகங்கள் நேற்று முதல் திறக்கப்பட்டுள்ளன.

அதற்கமைவாக மாத்தறை, கண்டி, குருநாகல் மற்றும் வவுனியா ஆகிய அலுவலகங்களின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

இவற்றில் காலை 9 மணிமுதல் பிற்பகல் 1 மணி வரை மட்டுமே சேவைகள் முன்னெடுக்கப்படும். அதுவும் அத்தியாவசிய சேவைகள் மட்டுமே முன்னெடுக்கப்படும். அதேவேளை ஒரேநாளில் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் பிரதான அலுவலகத்தில் மட்டுமே முன்னெடுக்கப்படும் என்று திணைக்களம் அறிவித்துள்ளது. (ஒ-4)


A/L இரசாயனவியல்
ZOOM Paper Class
அலகு ரீதியான மீட்டலுடன் ஒவ்வொரு அலகிலும் தரமான 10 மாதிரி வினாத்தாள்கள் செய்யப்படும்.
2021, 2022, 2023 Batches
Mr.S.Sureshkumar Bsc(Hons) PGDE
T.P: 077 555 9028 நாடளாவிய சேவை


## மாணவர்களுக்கான தடுப்பூசி வழங்கும் செயற்பாடு

# குழந்தைநல மருத்துவர்களின் மேற்பார்வையில் மருத்துவமனை வளாகத்துக்குள் நடத்தவேண்டும்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, செப்.16

**மாணவர்களுக்கான தடுப்பூசி வழங்கும் செயற்பாடு குழந்தைநல மருத்துவர்கள் மற்றும் உடற்பயிற்சி நிபுணர்களின் நேரடி மேற்பார்வையின் கீழ் மருத்துவமனை வளாகங்களுக்குள் நடத்தப்பட வேண்டும்.**

என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பொதுச் செயலர் மருத்துவர் நலிந்த ஹேரத் தெரிவித்ததாவது; பாடசாலை மாணவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி வழங்கலை ஆரம்பிப்பதற்கும் அதன் பரிந்துரைகளை சமர்ப்பிக்கவும் குழு நியமிக்கப் பட்டது. சுகாதார அதிகாரிகளுடனான நீண்ட கலந்துரையாடலைத் தொடர்ந்து இந்த குழுவுக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தலைமை தாங்கினார்.

12 முதல் 19 வயதுக்குட்பட்டவர்களுக்கு தடுப்பூசி போடுவதற்கான முக்கியமான கருவியாக குழுவின் பரிந்துரை இருக்கும். நாள்பட்ட நோய்கள் உள்ள சிறுவர்களுக்கும் 15 வயதுக்கு மேற்பட்ட சாதாரணதரம் மற்றும் உயர்தர மாணவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும். நமது நாட்டில் பல போதனா மருத்துவமனைகள் மாகாண பொது மருத்துவமனைகள் மற்றும் ஒவ்வொரு மாவட்டத்திலும் பொது மருத்துவமனைகள் உள்ளன. குழந்தைநல வைத்தியர்கள் மற்றும் உடற்பயிற்சி நிபுணர்கள் நாட்டின் பெரும்பாலான மருத்துவமனைகளில் பரவியுள்ளனர்.

எனவே அனைத்து குழந்தைகளுக்கும் ஒரே நேரத்தில் இந்தத் தடுப்பூசியை வழங்குவதற்கான சாத்தியக்கூறு எங்களிடம் உள்ளது -என்றார். (ஐ-இ)

# அசாத் சாலியின் கோரிக்கை நிராகரிப்பு

கொழும்பு, செப்.16

மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலியின் சார்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த பிணைக் கோரிக்கை, கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஊடக சந்திப்பொன்றில் சர்ச்சைக்குரிய கருத்தொன்றை வெளியிட்டதன் காரணமாக கைது செய்யப்பட்டுள்ள அசாத் சாலி மீதான வழக்கு, கொழும்பு பிரதான நீதிமன்றில் இடம்பெற்றுவருகின்றது. அவர் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். கடந்த மார்ச் 16 ஆம் திகதி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் அசாத் சாலி, கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ஒ-4)

## மரண அறிவித்தல்

### திருமதி தவம் வயிரமுத்து



டாக்டர் சுப்பிரமணியம் வீதி சுன்னாகத்தினை பிறப்பிடமாகவும் ஐயனார் வீதி சுன்னாகத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. தவம் வயிரமுத்து அவர்கள் 15.09.2021 புதன்கிழமை அதிகாலை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் காலமாகியுள்ளார்.

அன்னார் அமரர்களான நாகம்பிள்ளை அபிராமி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும், அமரர் வயிரமுத்து (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், அமரர்களான திருத்தணிகை நவரத்தினம், புஸ்கலாதேவி ஈஸ்வரலிங்கம்,வாசிநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (Covid) கோவிட் சுகாதார நடைமுறைகளினைப் பின்பற்றி யாழ்ப்பாணம் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதான தகவலினை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**தகவல்: பெறாமக்கள்.**

## தியாகதீபம்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, கிளிநொச்சியில் பிரத்தியேகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஓர் இடத்தில் நினைவேந்தலை நடத்தியது. அதில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் உள்ளிட்ட தரப்பினர் கலந்துகொண்டிருந்தனர் என்று அவருடைய கட்சியின் ஊடகப் பிரிவு குறிப்பிட்டது.

யாழ்ப்பாணத்தில், திலீபன் உயிர்நீத்த, யாழ்ப்பாணம் நல்லூரின் பின்வீதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் தூபியில் நினைவேந்தல் நடைபெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இந்த நினைவேந்தலை ஏற்பாடு செய்திருந்தது. கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செ.கஜேந்திரன், கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஸ் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் எனப் பலர் நினைவேந்தலில் கலந்துகொண்டிருந்தனர்.

1987 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 15ஆம் திகதி ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதத்தை ஆரம்பித்த திலீபன் 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் 26ஆம் திகதி உயிர்த்தியாகம் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த25,20,6)

## 8 கோடி...

பொருள், தலைமன்னார் கடற்கரைப் பகுதியில் கைப்பற்றப்பட்டுள்ளது. அதைக் கடத்திவந்தனர் என்ற குற்றச்சாட்டில் தலைமன்னார் பகுதியைச் சேர்ந்த 4 பேர் கடற்படையினரால் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

கடற்படையினர், தலைமன்னார் கடற்பரப்பில் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தபோது, சந்தேகத்துக்கிடமான மீன்பிடிப் படகு ஒன்றை நேற்றுமுன்தினம் இரவு சோதனைக்கு உட்படுத்தினர். அதன்போதே படகில், மீன்பிடி வலைகளுக்கு அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 10 பொதிகளாக பொதியிடப்பட்டிருந்த 'ஐஸ்' போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தலைமன்னார் பொலிஸாருக்கு கடற்படையினர் வழங்கிய தகவலின் அடிப்படையில் தலைமன்னார் பொலிஸார், குறித்த 'ஐஸ்' போதைப் பொருள் பொதிகளை கடற்படையினரிடமிருந்து பெற்றுக்கொண்டனர். குறித்த 4 பேரையும் கைது செய்தனர்.

அவர்கள் விசாரணையின் பின்னர் மன்னார் நீதிவானிடம் முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 29ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த-56,60)

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 1979.10.14

மறைவு 2021.09.14



அமரர்

### அபிமினி சதீஸ்குமார்

(போதனாசிரியர், அஞ்சல்.சேவை உத்தியோகத்தர், அஞ்சல் பயிற்சி கல்லூரி, யாழ்ப்பாணம்)

அன்பு முகம், அடக்கமான குணம்
ஈர விழிகள் இரண்டிலும் எப்போதும்
தழும்பும் ஈடில்லா நற்குணமும்
எங்கு சென்றீர் எமை விட்டு இக்கணம்

அபிமினி என்று உம் அன்னை
அன்றொரு நாள் இட்டபெயர்
மின்மினி போல் எம்மை விட்டு
மின்னி மறையத்தான் என்பதை அறியோமே!

பலமொழிகள் கற்றீர் பலருக்கும் கற்பித்தீர்
தபால் துறையில் போதனாசிரியரானீர்
இல்லறமென்னும் நல்லறத்தில் இணைந்தீர்
ஈன்ற சிசு அம்மா என்றழைக்கு முன்

எமையெல்லாம் விட்டு பிரிந்ததேனோ!
உம்மவரையும் உம் சிசுவையும்
எப்படியாற்றுவோம் எப்படித் தேற்றுவோம்
ஏங்கி நிற்கிறோம் உம் பிரிவால்

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.**

கண்ணீருடன்...

பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் (வடக்குமாகாணம்) மற்றும் உத்தியோகத்தர்கள்

பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் அலுவலகம், யாழ்ப்பாணம்

## காணவில்லை



**செபஸ்தியாம்பிள்ளை சுவக்கீம்பிள்ளை (பாலையா)**

என்பவரை நேற்று (15.09.2021) காணவில்லை. வயது 79, நீல நிற சேர்ட்டும், நீலம் பச்சை கலந்த சாரம் அணிந்திருந்தார். இவரை கண்டால் தொடர்பு கொள்ளவும்.

**077 9234 559**
**077 220 9656**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ச்சிகள்

## நாட்டைத்...

இவ்வாறு ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் நோய் எதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவப் பிரிவின் பணிப்பாளரும் விசேட மருத்துவ நிபுணருமான பேராசிரியர் சந்திம ஜீவந்தர நேற்றுத் தெரிவித்தார்.

குறிப்பாக பொதுப்போக்குவரத்து விடயங்களில் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும். மக்கள் பொதுப்போக்குவரத்தைப் பயன்படுத்தும் வேளையில் கண்டிப்பாக தனியாள் இடைவெளி உள்ளிட்ட சகல சுகாதார வழிமுறைகளையும் பின்பற்றியாக வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, பலவீனமான சுகாதாரக் கட்டமைப்பு காரணமாக நாட்டில் தென்னாபிரிக்க வைரஸ் பரவ அதிக வாய்ப்புகள் உள்ளன என சுகாதார மற்றும் மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதனிடையே, தினசரி கொரோனாத் தொற்று எண்ணிக்கை குறைவடைந்துவரும் நிலையில், திங்கட்கிழமைக்குப் பின்னர் நாட்டைத் திறக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்று இராஜாங்க அமைச்சர் விசேட மருத்துவ நிபுணர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே நேற்றுமுன்தினம் ஊடகங்களிடம் தெரிவித்திருந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (து-22)

## சாவு 132...

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் நேற்றுமுன்தினம் இந்தச் சாவுகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்று அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 11 ஆயிரத்து 699 ஆக அதிகரித்துள்ளது. நேற்றுமுன்தினம் சாவடைந்த 132 பேரில் 66 ஆண்களும், 66 பெண்களும் அடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதில் ஆண் ஒருவரும், பெண் இருவரும் என மூவர் 30 வயதுக்கு உட்பட்டவர்கள். 18 ஆண்கள், 10 பெண்கள் என 28 பேர் 30 முதல் 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 101 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 47 ஆண்களும், 54 பெண்களும் அடங்குகின்றனர்.

இதேவேளை,

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 2 ஆயிரத்து 314 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 96 ஆயிரத்து 423 ஆக எகிறியுள்ளது. அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 11 ஆயிரத்து 605 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 27 ஆயிரத்து 254 ஆக அதிகரித்துள்ளது. (து-22)

## 3 வாரங்களுக்குள்...

முடிவெடுக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்று தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டில் 200 மாணவர்களுக்கும் குறைந்த எண்ணிக்கையில் இயங்கும் 5 ஆயிரம் பாடசாலைகள் உள்ளன. முதற்கட்டமாக மேற்படி பாடசாலைகளில் கல்வி நடவடிக்கையை ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி முன்னுரிமை வழங்கி திறக்கப்பட வேண்டிய பாடசாலை விவரங்களை கல்வி அமைச்சின் செயலாளர் முன்வைப்பார். சுகாதார நடைமுறைகளை எவ்வாறு பின்பற்றி கல்வி நடவடிக்கையை முன்னெடுப்பது என்பது தொடர்பில் சுகாதார அமைச்சால் வழிகாட்டல்கள் முன்வைக்கப்படும். இன்னும் இரண்டு மூன்று வாரங்களுக்குள் நடவடிக்கை ஆரம்பமாகும்." என்றார்.

அதேவேளை, பாடசாலை மாணவர்களுக்கு மூன்று கட்டங்களாக தடுப்பூசி வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி வேறு நோயால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு முதலில் தடுப்பூசி ஏற்றப்படும்.

அதன்பின்னர் 16,17,18 மற்றும் 19 வயதுப் பிரிவினருக்குத் தடுப்பூசி ஏற்றப்படும். அந்தநடவடிக்கையின் பின்னர் 12 முதல் 15 வயதுப் பிரிவு மாணவர்களுக்குத் தடுப்பூசி வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் நாளை நடைபெறும் செயலணிக் கூட்டத்தின்போது இதற்கான யோசனை முன்வைக்கப்படவுள்ளது. தொழில்நுட்பக்குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் இறுதி முடிவு எடுக்கப்படும். - என்றார். (து-44)

## மூச்சுத்...

பட்டிருந்தது. இந்தநிலையில், நேற்றுமுன்தினம் திடீரென மூச்சுத்திணறல் ஏற்பட்டுள்ளது. அதனையடுத்து, குழந்தை தெல்லிப்பழை மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டபோதும், அதற்கு முன்னரே இறந்துவிட்டது என்று பரிசோதனையில் தெரியவந்தது.

பின்னர் குழந்தைக்கு மேற்கொண்ட அன்டிஜென் பரிசோதனையில் கொரோனாத்தொற்று உறுதிசெய்யப்பட்டது. (து-25)

## முதற் குழந்தையைப்...

அளவெட்டியைச் சேர்ந்த 42 வயதுடைய அந்தத் தாய், கடந்த 8ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்துள்ளார். எனினும் தாய் கொரோனாத் தொற்றால் பீடிக்கப்பட்டு அங்குள்ள கொரோனா சிகிச்சை நிலையத்தில் சிகிச்சையளிக்கப்பட்டு வந்தநிலையில், நேற்றுக்காலை உயிரிழந்தார்.

இறப்பு விசாரணையை மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (து-25,26)

## சிறைச்சாலை...

லொஹான் ரத்வத்த, நேற்றுப் பதவி விலகினார்.

அவரது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஏற்றுக்கொண்டுள்ளார்.

அநுராதபுரம் சிறைச்சாலைக்கு மதுபோதையில்சென்ற இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே, தமிழ் அரசியல் கைதிகள் சிலரை முழந்தாளிட வைத்து, துப்பாக்கி முனையில் கொலை மிரட்டல் விடுத்துள்ளார் என நேற்றுமுன்தினம் தகவல் வெளியானது. இதனைத் தமிழ் அரசியல் கைதிகளும் உறுதிப்படுத்தினர். அத்துடன், சிறைச்சாலை அதிகாரிகள் சிலரிடமும் இராஜாங்க அமைச்சர் அநாகரிகமாக நடந்துகொண்டார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்தநிலையில், இராஜாங்க அமைச்சரின் இந்தச் செயலை அரசியல் கட்சிகளும், சிவில் அமைப்புகளும், சர்வதேச அமைப்புகளும் கடுமையாக கண்டித்தன. குறிப்பாக அவரைக் கைதுசெய்யுமாறு தமிழ்க் கட்சிகள் வலியுறுத்தின. பதவிநீக்குமாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஜனாதிபதியிடம் கோரியிருந்தது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 48 ஆவது கூட்டத்தொடர் தற்போது நடைபெற்றுவரும் நிலையில் இராஜாங்க அமைச்சரின் இத்தகைய நடவடிக்கை அரசுக்கு பெரும் தலையிடியாக மாறியது.

குறிப்பாக இத்தாலியிலிருந்து இராஜாங்க அமைச்சருக்கு அழைப்பை ஏற்படுத்திய பிரதமர் மஹிந்த ராஜபக்ச, உடன் பதவி விலகுமாறு பணித்துள்ளார். இது தொடர்பில் ஜனாதிபதியுடனும் பிரதமர் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே இராஜாங்க அமைச்சர் பதவி விலகியுள்ளார்.

வெலிக்கட மற்றும் அநுராதபுரம் சிறைச்சாலைகளில் இடம்பெற்ற சம்பவங்களுக்கான பொறுப்பை ஏற்று தான் பதவி விலகுகின்றேன் என்று இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சிறைச்சாலை மறுசீரமைப்பு பதவியிலிருந்து அவர் பதவி விலகியிருந்தாலும், ஏனைய அமைச்சுப் பொறுப்புகளிலிருந்து விலகவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இரத்தினக்கல் மற்றும் ஆபரணம் சார்ந்த தொழிற்சாலை இராஜாங்க அமைச்சுப் பதவியிலிருந்து அவர் விலகவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (து-44)

## அநுராதபுரம்...

நேற்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அநுராதபுரம் சிறைச்சாலைக்குள் அத்துமீறி நுழைந்துள்ள இராஜாங்க அமைச்சர், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளுள் 8 பேரை முழந்தாளிடவைத்து மிரட்டியுள்ளார். அவரின் இந்த நடவடிக்கை நீதிமன்றத் தீர்ப்பையும் அவமதிக்கும் செயலாகும்.

கைதிகளைப் பார்வையிடச் செல்வதாயின் துப்பாக்கியுடன் செல்வதற்கு, சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்துக்குக்கூட அனுமதியில்லை. அப்படி இருக்கும்போது இராஜாங்க அமைச்சர் எவ்வாறு துப்பாக்கியுடன் சென்றார்?. கைதிகளைப் பார்வையிடும் சிறப்புரிமை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கின்றது என்பதற்காக முறையற்ற விதத்தில் செயற்படமுடியாது. எனவே, இராஜாங்க அமைச்சர் மட்டுமல்ல சிறைச்சாலை ஆணையாளர், சிறைச்சாலை அதிகாரிகளும் இதற்குப் பொறுப்புக் கூறவேண்டும்.

அநுராதபுரம் சிறைச்சாலையிலுள்ள சி.சி.ரி.வி. கமராக் காட்சிகளை அழிப்பதற்கான முயற்சி முன்னெடுக்கப்பட்டுவருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது. அவ்வாறான நடவடிக்கையில் அதிகாரிகள் ஈடுபடக்கூடாது. அதேபோல, இது விடயத்தில் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று கைதிகளின் உறவினர்கள் எம்மிடம் கோரியுள்ளனர். அநுராதபுரத்தில் மட்டுமல்ல வெலிக்கடை சிறைச்சாலையிலும் அடாவடித்தனமாக இராஜாங்க அமைச்சர் செயற்பட்டுள்ளார்." என்றார். (து-44)

## பட்டதாரி...

நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பயிலுநர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள பட்டதாரிகள், தமக்கு வழங்கப்படும் 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவில் ஏதேனும் பிரச்சினை இருக்குமாயின் அதனை உரிய பகுதியினரின் கவனத்துக்குக் கொண்டுவருமாறும் அவர் கூறியுள்ளார்.

குறித்த பட்டதாரிகளுக்கு விரைவில் தொழில் வழங்குவதற்கான பொறுப்பை ஜனாதிபதி ராஜபக்ச சில அமைச்சர்களுக்கு வழங்கியுள்ளார் என்று மேலும் தெரிவித்தார். (து-இ)

## தலைதூக்குகிறது...

விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இதற்கு முன்னர் கறுப்பு பூஞ்சை நோயால் பாதிக்கப்பட்ட சிலர் அடையாளம் காணப்பட்டிருந்தனர். எனினும், கொரோனாத் தொற்றாளர்கள் மத்தியில் இந்தநோய் இருக்கவில்லை. ஆனால், தற்போது கறுப்பு பூஞ்சை நோயால் பாதிக்கப்பட்டவர்கள் சிலர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சூழலிலிருந்தே இந்த நோய் தொற்றுகின்றது. குறிப்பாக நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருப்பவர்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். நோய் எதிர்ப்பு சக்தி குறைவானவர்களுக்கே கொரோனா அறிகுறிகள் கூடுதலாக தென்படுகின்றன. அவ்வாறானவர்களுக்கு கறுப்பு பூஞ்சை நோய் ஏற்படுவதற்கான வாய்ப்பும் அதிகம்.

ஒரு நபரிலிருந்து இன்னுமொரு நபருக்கு கறுப்பு பூஞ்சை பரவுவதற்கான சாத்தியம் இல்லை. நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்களுக்கு, சூழலில் இருந்தே இந்தநோய் தொற்றுகின்றது. எனினும், பாதுகாப்பாகவே இருக்கவேண்டும். உடலில் புள்ளிகள் வேகமாகப் பரவினால் மருத்துவ ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுங்கள்." என்றார். (து-44)

## 1,164 கிலோ ...

பொலிஸார் நேற்று அதிகாலை மீட்டனர்.

தமக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில், குறித்த வீடு சோதனையிடப்பட்டது. அதன்போது, 29 மூடைகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஆயிரத்து 164 கிலோகிராம் உலர்ந்த மஞ்சள் கட்டிகள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து குறித்த வீட்டின் உரிமையாளர் கைதுசெய்யப்பட்டார்.

கைப்பற்றப்பட்ட மஞ்சள் கட்டி மூடைகள், அடம்பன் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன. கைதுசெய்யப்பட்டவர், விசாரணையிலுள்ளார்.

அதன்பின்னர் அவர், மன்னார் நீதிவானிடம் முற்படுத்தப்படுவார் என்று அடம்பன் பொலிஸார் தெரிவித்தனர். (து-56)

## புரைக்கேறிய ...

குழந்தை உயிரிழந்தது. அதற்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இந்தச் சம்பவம், பருத்தித்துறை உடுப்பிட்டியில் நேற்று இடம்பெற்றது.

ஒரு வயதும் 3 மாதங்களும் நிரம்பிய அந்தப் பெண் குழந்தை பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் வெளிநோயாளர் பிரிவில் சேர்க்கப்பட்டபோதே உயிரிழந்துவிட்டது என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

அதனையடுத்து, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையிலேயே தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (து-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத் தமிழர்கள் பிரச்சினையையும் ஐ.நா.வை கவனத்திலெடுக்க வைப்போம்

## மனோ எம்.பி. தெரிவிப்பு



**கொழும்பு, செப். 16**

**எதிர்வரும் ஆண்டில் இந்நாட்டில் வாழும் மலையகத் தமிழர்கள் எதிர்நோக்கும் அரசியல், சமூக, பொருளாதார, கலாசார உரிமை மீறல்களையும், ஐ.நா. மனித உரிமையக அவதானத்துக்கு முன் வைக்க நாம் உத்தேசித்துள்ளோம்.**

என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தற்போதைய கூட்டத்தில் வாய்மொழி அறிக்கையை வெளியிட்டுள்ள மனித உரிமை ஆணையர், அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 49ஆம் கூட்டத்தில், எழுத்து மூல அறிக்கையை வெளியிடுவார். அதன் பின் ஜூன் மாதம் 50ஆம் கூட்டம் கடந்து போகும்.

அதையடுத்து, செப்ரெம்பரில் கூடும் 51ஆம் கூட்டத்தில், இலங்கை அரசின் அது வரையிலான 'மனித உரிமை நடத்தை' தொடர்பில், ஆய்வு செய்து, எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய பரிந்துரைகளை, ஐ.நா. மனித உரிமை ஆணையர் மிச்செல் பச்லெட் வெளியிடுவார். இந்தக் கூட்டங்களும் முக்கியமானவை.

இம்முறை வாய்மொழி அறிக்கையில், 'இலங்கை தொடர்ந்து ஐ.நா.வின் கண்காணிப்பு வலயத்தில் இருக்கும் எனவும், இலங்கைக்கு எதிராக இதுவரை ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட சாட்சியங்கள் சேகரிக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றை மேலும் சேகரிக்க, இவ்வாண்டு மார்ச்சில் எடுக்கப்பட்ட 46/1 தீர்மானத்தின்படி தான் கட்டுப்பட்டிருப்பதாகவும்' ஆணையர் மிச்செல் பச்லெட் கூறியுள்ளமையை வரவேற்கின்றோம்.

இம்முறை, தமிழ்க் கட்சிகள் ஐ.நா. மனித உரிமை ஆணையருக்கு, வெவ்வேறாக கடிதங்கள் எழுதியமை பற்றி மேண்மேலும் பேசி முரண்படக் கூடாது. உண்மையில் இப்படி பல கடிதங்கள் சென்றமை நல்லதே என அவற்றை நாம் சாதகமாகப் பார்க்கவேண்டும்.

அடுத்த வருட அவைகளின் போது தமிழ்க் கட்சிகள் ஒருமுகமாக ஐ.நா. மனித உரிமை ஆணையகத்தை அணுகலாம். அதற்கான முன்தயாரிப்புப் பணிகளை இப்போதே ஆரம்பிக்கவேண்டும். மனித உரிமைக் கூட்டங்களின்போது மாத்திரம் திடீரென எழாமல், எவ்வேளையிலும் விழிப்புடன் செயற்பட வேண்டும். எதிர்வரும் ஆண்டில் அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் இணைந்து பயணிக்கலாம் என நான் நம்புகிறேன்.

இறுதிப்போரில் சொல்லொணாத் துன்பங்களை சந்தித்த வடக்கு கிழக்கு தமிழ் உடன்பிறப்புகளை பற்றியே ஐ.நா. மனித உரிமை ஆணையம் ஆரம்பத்தில் பெரிதும் பேசியது. இப்போது இலங்கையில் ஒட்டுமொத்த சிவில் சமூக செயற்பாடுகள், இராணுவ மயமாக்கல், மற்றும் முஸ்லிம் சகோதரர்கள் மீதான ஒடுக்கு முறை, கத்தோலிக்க மக்களைக் குறிவைத்த உயிர்த்த ஞாயிறு தாக்குதல் ஆகியவை பற்றியும் ஐநா மனித உரிமை ஆணையர் பேசுகிறார்.

இப்பின்னணியில், அரச கொள்கைகளால் ஒடுக்குமுறைக்கு உள்ளாகியுள்ள, மலையகத் தமிழர்கள் மீதான அரசியல், சமூக, பொருளாதார, கலாசார உரிமை மீறல்களையும், ஐ.நா. மனித உரிமையக அவதானத்துக்கு முன்வைக்க உத்தேசித்து நடவடிக்கைகளை நாம் ஆரம்பித்துள்ளோம், -என்றார். (ஒ-இ)

# 4 நாள்கள் மட்டுமே தபாலகம் திறக்கும்

கொழும்பு, செப்.16

நாடளாவிய ரீதியில் அனைத்து தபாலகங்களும் 4 நாள்கள் மட்டுமே திறக்கப்படும் என்று அஞ்சல்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு நடைமுறையிலுள்ள காலத்தில் வாரத்தில் பிரதி திங்கள், செவ்வாய் வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் மாத்திரம் தபாலகங்கள் திறக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4)

# மருத்துவமனையில் நெகிழ்வான சம்பவம்

## பலரும் பாராட்டு



திருமலை, செப்.16

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட 11 மாதங்களேயான குழந்தைக்கு மருத்துவர்கள், தாதியர்கள் இணைந்து பாசத்துடன் சிகிச்சை அளித்தமையை பலரும் பாராட்டியுள்ளனர்.

இந்தச் சம்பவம் திருகோணமலை கந்தளாய் மருத்துவமனையில் பதிவாகியுள்ளது.

பெற்றோர் இன்றி சிறுவர் இல்லமொன்றில் வளர்க்கப்பட்ட குழந்தை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டு, சிகிச்சைக்காக கந்தளாய் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது.

குழந்தையை மருத்துவர்களும், தாதிமார்களும் பராமரிக்கும் விதத்தைக் காண்பிக்கும், மனதை நெகிழவைக்கும் தருணங்களை ஒளிப்படங்களாக சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு பலரும் பாராட்டியுள்ளனர். (ஒ-4)



# கல்மடுநகர் காட்டில் 42 லீற்றர் கசிப்பு மீட்பு

கிளிநொச்சி, செப்.16

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் காட்டுப்பகுதியில் செயற்பட்ட கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டது.

சிறப்பு அதிரடிப் படையினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய, கசிப்பு உற்பத்தி செய்யும் இடத்தை சிறப்பு அதிரடிப்படையினர் முற்றுகையிட்டனர்.

அங்கிருந்து 42 லீற்றர் கசிப்பு, 445 லீற்றர் கோடா மற்றும் உபகரணங்கள் கைப்பற்றப்பட்டன.

உற்பத்தியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் தடயப்பொருள்களுடன் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஒ-4-214)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் 25 பேருக்கு அழைப்பாணை

கொழும்பு, செப்.16

கத்தோலிக்க தேவாலயங்கள் மற்றும் நட்சத்திர ஹொட்டல்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தொடர் குண்டுவெடிப்புத் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள, மௌலவிகள் உட்பட பிரதிவாதிகள் 25 பேருக்கு அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 25 பேரையும் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 4 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு, மூன்று நீதிபதிகள் அடங்கிய மேல் நீதிமன்றத் தீர்ப்பாயம் அழைப்பாணை பிறப்பித்துள்ளது. சட்டமா அதிபர் தாக்கல் செய்த வழக்கை விசாரணை செய்த மேல் நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் அடங்கிய குழாம், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான குற்றப்பத்திரத்தை வழங்குவதற்காக, நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை பிறப்பித்துள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரியவால் நியமிக்கப்பட்ட நீதிபதிகளான தமித் கொட்டவத்த (தலைவர்) அமல் ரணராஜா மற்றும் நவரட்ன மாரசிங்க அடங்கிய குழாம் இந்த அழைப்பாணையைப் பிறப்பித்துள்ளது. இந்த வழக்குத் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட 23 ஆயிரத்து 270 குற்றச்சாட்டுகளை விசாரிக்க, மேல் நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட தீர்ப்பாயத்தை அமைக்குமாறு, சட்டமா அதிபர் சஞ்சய ராஜரத்தினம் கோரிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-4)

# கொரோனா தொற்றியவர்களுக்கு நிரந்தரமான நுரையீரல் பாதிப்பு!




## சுவாச நிபுணர் தெரிவிப்பு

கொரோனாத் தொற்று அறிகுறிகள் ஏற்பட்டவர்களில் 5 முதல் 10 வீதம் பேர் நிரந்தர நுரையீரல் பாதிப்பைக் கொண்டிருக்கலாம். எனவே அவர்கள் மீண்டும் சிகிச்சை பெற வேண்டும் என்று ஹோமாகம மற்றும் அவிசாவளை மருத்துவமனைகளின் சுவாச நிபுணர் மருத்துவர் துஷார கலபட தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கொரோனாத் தொற்றுநோயிலிருந்து மீண்ட பின்னரும் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்பவர்களுக்கு அரச மருத்துவமனைகளில் கொரோனாவுக்குப் பிந்தைய கிளினிக் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. தொற்றுக்குள்ளானவர்கள் குணமான சில வாரங்களின் பின்னர் சுவாசிப்பதில் சிரமம், சோர்வு, தலைவலி, மார்பு மற்றும் உடல்வலி, இருமல், தூக்கமின்மை மற்றும் ஞாபக மறதி போன்ற அறிகுறிகள் தென்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளனர். இந்த அறிகுறிகள் இரண்டு வாரங்களுக்கு மேல் நீடித்தால் அவர்கள் மருத்துவமனைகளின் சுவாசப் பிரிவிலோ அல்லது மாவட்ட மருத்துவமனைகளில் உள்ள கிளினிக் பிரிவுகளிலோ சிகிச்சை பெறுவது பொருத்தமானது. -என்றார். (ஒ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.